[illegible]

IV

ஜூலை, 1929

Y31m2,N26
N29.4.11
199388

No. M. 2475. Vol IV—1

## "கிராம அபிவிருத்தி"

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)
எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்,
ஆபீஸ் : 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV நவம்பர், 1929 நெ 11

பொருளடக்கம்.


| நெ | | பக்கம் |
|---|---|---|
| 98. | கிராமாந்தர வைத்திய வசதி | 261 |
| 99. | பால் ... ... | 263 |
| 100. | தோட்டத்தொழில் ... | 265 |
| 101. | கூட்டுறவு முதல்நூல் ... | 269 |
| 102. | மயிர் ... ... | 273 |
| 103. | விவேக விசாரங்கள் ... | 275 |
| 104. | கிராமச் சீரமைப்பு விஷயமும், கூட்டுறவும் | 277 |
| 105. | ஈக்கள் ... ... | 281 |
| 106. | அரிசி ... ... | 282 |
| 107. | பாரெஸ்டு பஞ்சாயத்துகள் ... | 282 |
| 108. | மித்ரி— ஓர்கதை ... ... | 285 |



| | | |
|---|---|---|
| வருடச் சந்தா : | உள்நாடு ரூ 3 | வெளிநாடு ரூ 4 8 0 |
| தனிப்பிரதி : | ,, அணா 6 | ,, அணா 8 |

ஆச்சரியமுள்ளது! அதிசயத்தக்.

# தாது புஷ்டிக்குத் தங்க ரேக்கை

சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தில் சாப்பிடுங்கள்.

தாதுபுஷ்டிக்கு நிகரான வேறு மருந்து ஒன்றுமேயில்லை. இதைக் காலை மாலை நோய் பலம்போல் ஒன்றிரண்டு மண்டலம் உட்கொண்டால் வெகுசீக்கிரத்தில் வீரியத்தை கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்யும். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்யம், இந்த பருவங்களில் அடையவேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யவும் கிழத்தனத்தை நீக்கி வல்லமை அடையச் செய்வதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. நீரழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல் கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு சூலை, கிரந்தி முதலிய சகல கர்ம வியாதிகளும் நீக்கும், பத்தியமில்லை. 100-நாளைக்கு தங்க ரேக்கும் சித்தானந்த சிட்டுக்குருவி லேகியமும் ரூபா 100. 50 நாளைக்கு ரூபா 50, 25 நாளைக்கு ரூபா 25. சிங்கப்பூர் பினாங்கு F. M. S. வாசிகள் சார்ஜு ரூபாய் 2 சேர்த்து முன்பணம் அனுப்பவும். அல்லது அட்வான்சு ரூபா 5 அனுப்பவும்.

**காருண்ய கவர்மெண்டாரால் பரீக்ஷிக்கப்பட்டது**

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க வெள்ளி பதக்கங்களும் பரிசுபெற்றது.

# சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த அருமையான வீரதத்துவ லேகியத்தை உபயோகித்து இழந்த வீரியத் தத்துவத்தையும், ஆண் சிங்கத்திற்கு ஒப்பான தேகபலத்தையும், மின்னுள் இன்பத்தையும், புருஷ கெம்பீரத்தையும், ஏழுவகை தாதுக்களின் திடத்தையும் உலக இல்லற வாழ்க்கையின் அநுகூலத்தையும் பெறவில்லை என்று ருஜுப்படுத்தும் கனவான்களுக்கு எங்கள் மருந்து சாலையிலிருந்து ரூ. 5000 வெகுமதி அளிக்கப் படும்.

மேலே சொல்லும் 5000. ரூபா வெகுமதிக்காக 14-8-20-ல் எங்கள் பேரால் கிரயமானதும் தற்காலம் ரூபா பதினாயிரம் மதிப்புள்ளதும், கவர்மெண்டின் சட்டப்படி 10 ரூபா ஸ்டாம்பின்பேரில் எழுதி சர்க்கார் டாக்ளாத்தில் 933-குழி விஸ்தீரண நஞ்சை வகைராக்களை 20-9-20-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொத்தை ஜாமீனாக வைத்து இருக்கிறோம். ஆனதால், கனவான்களே! சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தை ஒரு முறை பரிசோதித்துப் பாருங்கள்.

ஜெயம் பெறுவீர்கள்! உள்ளபடி ஜெயம் பெறுவீர்கள்!!

இதன் கிரயம் [எவ்வித பத்தியமுமில்லை]

| | | |
|---|---|---|
| 96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை ரூபா | ... ... | 15-0-0. |
| 48 வேளை 24 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூ | ... ... | 8-0-0. |
| 24 வேளை 12 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூ | ... ... | 4-4-0. |

சவுத் ஆப்ரிக்கா, டிரான்சிவால், சுமாத்ரா, ஜாவா, சிலப்பீன்ஸ், கொச்சின், சீனா, பிஜி முதலிய வெளிநாட்டு ஆர்டர்கள் பார்சல் செலவுக்கு ரூபா 2சேர்த்து முன் பணம் அனுப்பவும்.

# தாமரை லிங்கத் தைலம்

கனவான்களே! இந்த அருமையான தைலத்தை மூன்றுதடவை போதுமளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவிகளின் மீது தேய்த்த உடன் தாங்கள் இது வரை பாராத ஆச்சரியத்தை தரும்படியான கருவிகளைப் பெருகச்செய்து நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகுமென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகர பாட்டில் விலை ரூ. 1. வி. பி. பாக்கிங் செலவு பிரத்தியேகம்.

கிடைக்கும் விலாசம்:— **ஸாஹேபியா மருந்துசாலை,**

## "கிராம அபிவிருத்தி" (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்,

### சுக்கில௵ கார்த்திகை ௴

-JAN 1930

| நவம்பர். | டிசம்பர். | கார்த்திகை | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | | 1 | சனி | சது 3-29<br>○பௌ 56-30 | பர 40-3 | சி 40-அ | கரிநாள் |
| 17 | | 2 | ஞா | பிர 55-18 | கார்37-40 | சி 60 | தீபம் |
| 18 | | 3 | தி | துதி50-23 | ரோ34·23 | அ60 | அக்ஷராப்பியாஸம் |
| 19 | | 4 | செ | திரு34-53 | மிரு30-57 | சி31 | வாகனம்மாற்ற |
| 20 | | 5 | புத | சது39-6 | திரு26-58 | சி60 | வேங்கடசதுர்த்தி |
| 21 | | 6 | வி | பஞ்33·14 | புன22-53 | அ60 | |
| 22 | | 7 | வெ | சஷ்27·29 | பூச18-51 | ம60 | சரபாயனம் |
| 23 | | 8 | சனி | சப்21-56 | ஆயி15-2 | ம15அ | பைரவாஷ்டமி |
| 24 | | 9 | ஞா | அஷ்17-1 | மக 11-43 | ம12சி | |
| 25 | | 10 | தி | நவ 12-42 | பூர 9-1 | சி60 | கரிநாள் |
| 26 | | 11 | செ | தச 9-13 | உத் 7-8 | அ7சி | மருந்துசெய்ய |
| 27 | | 12 | புத | ஏகா 6-42 | அஸ் 5-58 | ம6சி | புதுதரிபோட |
| 28 | | 13 | வி | துவா5-22 | சித் 6-30 | சி7அ | கோடியுடுக்க |
| 29 | | 14 | வெ | திர 5-22 | சுவா 7-55 | சி60 | தனியநாள் |
| 30 | | 15 | சனி | சது 6-39 | விசா10-39 | சி60 | வாசக்கால் வைக்க |
| | 1 | 16 | ஞா | ● 9-1 | அது14-36 | ம60 | |
| | 2 | 17 | தி | பிர 12-54 | கே 19-37 | சி60 | கரிநாள் |
| | 3 | 18 | செ | துதி17-26 | மூல25·23 | அ25சி | மந்திரப்பிரயோகம் |
| | 4 | 19 | பு | திரு22-23 | பூரா31·41 | அ60 | கடனதீர்க்க |
| | 5 | 20 | வி | சது27-54 | உத்ர38-7 | சி60 | கும்பம்விவாகம்சீமந்தம் |
| | 6 | 21 | வெ | பஞ்32-28 | திரு44-17 | ம44சி | சுபகாரியம்நீக்க |
| | 7 | 22 | சனி | சஷ்37-28 | அவி49-50 | சி50அ | அடுப்புபோட |
| | 8 | 23 | ஞா | சப் 41-3 | சத 54-28 | சி60 | கும்பம்கிரகப்பிரவேசம் |
| | 9 | 24 | தி | அஷ்43-31 | பூரட்58-0 | ம58சி | |
| | 10 | 25 | செ | நவ-44-47 | உத்60-0 | அ60 | மஞ்சள்நட |
| | 11 | 26 | புத | தச44-35 | உத் 0-6 | ம60 | |
| | 12 | 27 | வி | ஏகா43-14 | ரே 1-28 | சி1அ | காதுகுத்த |
| | 13 | 28 | வெ | துவா40-45 | அசு 1-7<br>பர 58-44 | அ1சி | கிழங்குகள்நட |
| | 14 | 29 | சனி | திர37-14 | *கா57-45 | அ60 | பசுக்கள் வாங்க |

# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள் முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி.

---

## கம்ம பாலன்

பிரதிதமிழ் மாதக்கடைசியில் வெளிவரும் சிறந்த தமிழ்ப்பத்திரிகை. நான்காம் வருடம் நடைபெறுகிறது. ஐக்கியம், சுகாதாரம், பஞ்சாயத்து, கல்வி, விவசாயம் முதலிய கிராம முன்னேற்றத்திற்கவசியமான விஷயங்கள் பிரசுரிக்கப்படுவதால் இஃது கிராமவாசிகளுக்கின்றியமையாதது.

பத்திராதிபர் ஸ்ரீ ஆர். வேங்கடசாமி நாயுடு: வருடசந்தா தபாற்செலவுட்பட ரூபா ஒன்றுதான். விளம்பரவிகிதத்திற்கு மானேஜருக்கெழுதுங்கள். மாதிரிக்காப்பி இலவசம். இன்றே எழுதுக. மானேஜர், கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல் Po. இராமநாதபுரம் ஜில்லா, (Ramnad Dist)


---

# அறிக்கை

“ரூரல் இந்தியா” சந்தாதுகைகளும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகிய விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் துகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ராஜகோபால ரெட்டி

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு

முகாம் :— பாலவாக்கம்

ஊத்துக்கோட்டை போஸ்டு,

செங்கல்பட்டு ஜில்லா.


60-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல்

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.



அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

# ஷண்முகம் பட்டணம்பொடி

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,**
**போஸ்டு பாக்ஸ் 140. மதுரை.**

80 வருஷகாலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா டவுன் கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசுநெய் மணம், குளிர்ந்த குணம், இன்புரும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இமையப்பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமார்ந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புருங்கள்.

அசல் ஷண்முகம்பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ 4-4-0 இரண்டாந்தரம் ரூ -43-0

டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தால் உள்படக் கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

| | விலை | | | தபால் கூலி | | | பாக்கிங் | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 | 9 | 0 | 0 | 4 | 0 | 0 | 1 | 0 | 0 | 14 | 0 |
| 6 புட்டி | 1 | 2 | 0 | 0 | 5 | 0 | 0 | 1 | 0 | 1 | 8 | 0 |
| 12 புட்டி | 2 | 4 | 0 | 0 | 8 | 0 | [illegible] | [illegible] | [illegible] | 2 | 13 | 0 |

## யுனைடெட் நாஷனல் இன்ஷூரென்ஸூ கம்பெனி, லிமிடெட்:

தலைமை ஆபீஸ்: கராச்சி.

மூலதனம்:— ஒருபங்கு ரூ 100 விகிதம் 5 லக்ஷம் ரூபாய்க்கு 5000 பங்குகளாக பகுக்கப்பட்டது.

ஒரு பங்குக்கு விண்ணப்பத்துடன் ரூ 10ம். பிற்பாடு தெரிவிக்கப்படும் போது ஒவ்வொரு தடவையும் ரூ 5 விகிதம் செலுத்த வேண்டியது.

தற்காலம் மஹாஜனங்கள் பங்குகள் எடுத்துக்கொள்ளலாம். ஸிந்து மாகாணத்தில் தற்போதுள்ள இன்ஷூரென்ஸூ கம்பெனிகளுள் எல்லா ஜனங்களுக்கும் பொதுவானதும் முதன்மையானதும் நம்முடைய கம்பெனியே.

குறிப்பு:— கம்பெனியின் முழுவிவரங்களடங்கிய ப்ராஸ்பெக்டஸ் வேண்டுமானால் கம்பெனி மானேஜர்களிடமிருந்தாவது "ஸெண்ட்ரல் பாங்க்-ஆப்-இந்தியா எந்த ஆபீஸிலிருந்தாவது பெற்றுக்கொள்ளலாம்.

மற்றவிவரங்கட்கு விலாஸம்:—

மானேஜிங் ஏஜண்டுகள்,

தி. யுனைடெட் நாஷனல் இன்ஷூரென்ஸ் கம்பெனி லிமிடெட்,
ப்ரீடீ ரோட், கராச்சி.



**ரப்பர் ஸ்டாம்புகள்.**

பதக்கங்கள் பரிசு பெற்றவை
குறைந்த துகை — — — சிறந்த
வேலைப்பாடு திருப்தியைத்தந்திடும்,
இன்றேல் பணம் வாபீஸ்.
கேடலாக் இனும்.

**மதராஸ் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,**
தபாற் பெட்டி 74. மதராஸ்.



**RUBBER-STAMPS**

— AWARDED MEDALS —
LOWEST PRICES — BEST QUALITY
SATISFACTION GUARANTEED
OR YOUR MONEY BACK.
CATALOGUE free.

**The Madras Rubber Stamp Mfg. Co.**
POST BOX 74. MADRAS.



**రబ్బరు స్టాంపులు.**

మెడల్సు పొందినవి.
వెల సరసము పలమధికము.
తృప్తికి మేము ఉత్తరవాదము.
లేనియెడల మీసొమ్ము వాపసు.
కేటలాగ్ ఇనాము.

**ది. మద్రాసు రబ్బరు స్టాంపు కంపెని.**
తపాలు పెట్టె 74. మద్రాసు.

**To Let.**


# ரூரல் இந்தியா


(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிக்கை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்
ஆபீஸ் : 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்

வால்யூம் IV நவம்பர். 1929 நெ. 11.


## கிராமாந்தர வைத்திய வசதி.

திருப்பத்தூர் வைத்திய ஆச்ரமத்தைச் சேர்ந்த டாக்டர் ஈ' பாரெஸ்டர் பேடன் சென்னை வைத்திய கலாசாலையின் மாணவர் சங்கத்தில் கிராமப் பிரதேசங்களில் ஜனங்களுக்குள்ள வைத்திய வசதிக் குறைகளைப்பற்றி ஓர் அரிய உபந்நியாஸத்தைச் செய்தார். அவ்வுபந்நியாஸத்தின் ஸாராம்சத்தை அடியில் எடுத்துரைக்கிறோம். கிராம முன்னேற்றத்தைக் கோருகிற நமது நேயர்களனைவரும் அதை கவனித்துப் படிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.

கவர்மெண்டார் பிரஜைகளின் வைத்திய சௌகரிய நிமித்தமாக அளவற்ற திரவியங்களைச் சிலவிடுகிறார்கள். ஆனால், அத்தனை பணங்களும் நகரங்களிலுள்ள வைத்திய ஸ்தாபனங்களுக்காகவே வெகுவாக உபயோகிக்கப் படுகின்றன, கிராமங்களுக்காக கொஞ்சம் பணம்தான் சிலவாகிறது. மாகாணத்திலுள்ள ஜனத்தொகையில் முக்கால் பங்கு கிராமவாஸிகள். ஆகவே, கால் பங்காகிய நகரவாஸிகளின் வைத்திய சௌகரியமே கவர்மெண்டாரால் கவனிக்கப் படுகிறதே யொழிய கவர்மெண்டுக்கு வரியைக் கொடுத்துப் பணத்தை யுண்டாக்குகிற கிராம வாஸிகளின் வைத்திய சௌகரியம் திருப்தியாக கவனிக்கப்படுகிறதில்லை. கிராம ஜனங்களின் சரீர பலமும் வரவரக் குறைந்து வருகிறது. அவர்களும் ஆரோக்கியக் குறைவான வழக்கங்களை விடாமலிருக்கிறார்கள். மேலும் அவர்கள் கல்வியில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். படித்த ஜனங்களும், கவர்மெண்டாரும் கிராம ஜனங்களுக்குப் போதனைகளைச் செய்கிறதில்லை. மேனாட்டு வைத்தியத்தை அநுஷ்டிக்கும் கவர்மெண்டு ஜில்லா டாக்டர்கள் தங்களுடைய ஆபீஸ்களிலேயே காலத்தைக்கழிக்கிறார்களேயொழிய அடிக்கடி கிராமங்களைப்போய்ச்சுற்றிப்பார்த்துக் கிராமத்தவர்க

ளுக்கு வைத்தியஞ் செய்கிறதில்லை. மேநாட்டுமுறையை யநுஷ்டிக்கிற கவர்மெண்டு டாக்டர்கள் கிராம வாஸிகளோடு கலந்து கொள்கிறதில்லை, கிராம வாஸிகள் அந்த டாக்டர்களின் உத்தியோக பிருதுகளைப்பார்த்து அச்சங்கொண்டு அவர்களிடத்தில் நெருங்கித்தங்களுடைய நோய்விவரங்களை தெரிவித்துக்கொள்கிறதில்லை. டாக்டர்களும் கிராம ஜனங்களின் பழக்கவழக்கங்களையும் அறிந்து கொள்ள முயலுகிறதில்லை. டாக்டர்களுக்குப்பல வேலைகளிருப்பதாலும் அவர்கள்பல நோயாளிகளைக்கவனிக்க வேண்டியதாக விருப்பதாலும் அவர்கள் நோயாளிகளைச் சரிவரப்பார்த்துச் சிகித்ஸை செய்யக்கூடுகிறதில்லை. கவர்மெண்டு ஹாஸ்பிடல்களிலும், மிஷன் ஹாஸ்பிடல்களிலும் நோயாளிகளிடத்திலிருந்துப் பணம்பிடுங்குகிற வழக்கமிருக்கிறது. பணம் வராவிட்டால் சிகித்ஸையானது நாளோட்டப்படுகிறது. ஏழைகளுக்குச் சரியான படி சிகித்ஸை செய்யப்படுகிறதேயில்லை.

கிராமத்தவர்களுக்குச் சிகித்ஸை செய்யும்பொழுது டாக்டர்கள் சுதேச வைத்தியர்களைப்போல் நோயின் விவரங்களையும் சிகிச்சை முறை விவரங்களையும் அவர்களுக்குத் தெரியும்படிச் சொல்கிறதில்லை. டாக்டர்களுக்கு சுதேச பாஷை தெரிகிறதில்லை. தவிரவும் அவர்களுக்கு வைத்தியபோதனைகள் இங்கிலீஷிலேயே நடத்தப்பட்டிருக்கின்றன. சீனாவில் மேனாட்டு வைத்தியம் சீனர்களுக்கு சீனபாஷையிலேயே கற்பிக்கப்படுகிறது. ஆகவே, சீன டாக்டர்கள் அத்தேசத்துக் கிராமவாசிகளுக்கு சிகித்ஸை செய்யும் பொழுது எல்லாவற்றையும் விவரமாய்ச் சொல்கிறார்கள். அப்படிப்போலவே நமது டாக்டர்களும் ஏழை நோயாளிகளிடம் கலந்துகொண்டு அன்பு பாராட்டி அவர்களுக்கு விஷயங்களை யெடுத்துச் சொல்லவேண்டும்.

நம்முடைய தேசத்தில் வைத்தியக் கல்விச் சாலைகளனைத்தும் கவர்மெண்டாராலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளின் சிலவுகளெல்லாம் கிராம ஜனங்களின் வரிப்பணத்தொகையிலிருந்து செய்யப்படுகின்றன. ஆகவே, அக்கல்விச்சாலைகளிலிருந்து போதனைகளையடைந்த டாக்டர்கள் கிராமங்களில்போய் வஸித்து கிராம ஜனங்களுக்கு சிகித்ஸைகளை யநுஷ்டிக்க வேண்டும். அவர்கள் இரண்டு இரண்டு பேர்களாக கிராம ஸ்தலங்களில் ஸ்தாபித்துக் கொண்டு முயர்ச்சிகளை யநுஷ்டிக்கலாம். இவ்விதமாக அவர்கள் வைத்தியத்தில் தேர்ச்சியையும் அநுபவத்தையும் அடைந்து தேச வைத்திய ஞானத்தை அபிவிருத்தி செய்யலாம். கிராம ஜனங்கள்



டாக்டர்களுக்கு அதிகப்பணத்தைக் கொடுக்கச் சக்தியற்றவர்களாக விருந்தபோதிலும் கிராமங்களில் வைத்தியத்தை நடத்தும் டாக்டர்களுக்குத்தக்க வரும்படிகள் கிடைக்குமென்பதில் சந்தேகமேயில்லை.

திருப்பத்தூர் வைத்திய ஆச்ரமத்தில் 25 நோயாளிகளுக்குச் சௌகரியங்களிருக்கின்றன. இரண்டு டாக்டர்கள் வைத்தியஞ் செய்கிறார்கள். அவர்கள் கிராமங்களுக்குச் சென்றுக்குடிசைகளுள் புகுந்து ஏழை ஜனங்களோடு கலந்துகொண்டு வைத்தியஞ் செய்துவருகிறார்கள். திருப்பத்தூர் ஸ்தாபனம் வெகு உயர்வான வேலையைச்செய்து வருகிறதென்பதில்ச் சந்தேகமில்லை.

## பால்.

பசுக்கள் ஆரோக்கிய முள்ளவைகளாக விருக்க வேண்டும் அவைகள் கூடியவரையில் திறந்த வெளிகளிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். பசுக்களைவாங்குவதற்கு முன் அவைகள் நோயில்லாமலிருக்கின்றனவா வென்று ஜனங்கள் கவனிக்க வேண்டும். நோய்களையுடைய பசுக்கள் மற்றபசுக்களினின்று விலக்கப்பட்டு வேறு இடங்களில் வைக்கப்பட வேண்டும்.

பசுக்கள் சுத்தமாக வைக்கப்பட வேண்டும். அவைகளுக்கு நல்ல படுக்கையைப் போடவேண்டும். அப்போதைக் கப்போது படுக்கைப் புதிப்பிக்கப்பட வேண்டும். தொழுவங்களும் மூத்திரக்கால்களும் சரியாயமைக்கப்பட வேண்டும்.

பாலைக்கறக்குமுன் சுத்தமான ஈரத்துணியினால் பசுவின் மடியையும் முலைக்காம்புகளையும் சுத்தம் செய்யவேண்டும். மடியானது அதிக அழுக்காயிருந்தால் ஸோப்பைக் கொண்டு வெந்நீரினால் அதைக் கழுவி சுத்த வஸ்திரத்தால் துடைத்து உலரச்செய்ய வேண்டும்

ஒவ்வொருதரம் கறக்கும் பொழுதும் மடியிலும் முலைக்காம்புகளிலும் ஏதாவது உருண்டை அல்லது வீக்கம் இருக்கிறதா வென்று பார்க்கவேண்டும். இப்பரிசோதனைப் பாலைக்கறந்த பிறகு செய்யப் படவேண்டும். பாலைக் கறந்த பின்பு மடி தளர்ந்திருக்குமாகையால் ஏதாவது வீக்கமாவது உருண்டையாவது இருந்தால் அது அப்போது நன்றாய்க் கண்டுபிடிக்கப்படும்.

உருண்டையாவது வீக்கமாவது இருக்கும் பக்ஷத்தில் ஒரு மாட்டுவைத்திய டாக்டரைக் கொண்டு பார்க்கச் சொல்ல வேண்டும்.

அவர் பார்த்த பின்பு அபாய மொன்றுமில்லை யென்று சொன்னா லொழிய அப்பசுவின் பால் உபயோகிக்கப்படக்கூடாது.

பால் கறக்கிறவர்கள் கறக்குவதற்குமுன் கைகளை செவ்வை யாயலம்பி நகபிரஷினால் அழுக்கை எடுத்து விட்டுக்கறக்கவேண்டும். அவர்கள் பால் கறக்கும் பொழுது சுத்தமான உள்ளாடையை தரிக்கவேண்டும். துர்பலமான மனிதர்களும் நோயுள்ளவர்களும் பசுவின் அருகே வரக்கூடாது.

மாட்டுத்தொழுவ மானது வெளிச்சமுள்ளதாக விருக்க வேண்டும். அது நல்ல காற்றோட்ட முள்ளதாகவு மிருக்கவேண்டும்.

எருக்குழியானது தொழுவத்திற்கு வெகு தூரத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். காற்றுவரும் வழியில் அது இருக்கக் கூடாது. தொழுவத்திலாவது அதைச்சேர்ந்த கட்டிடத்திலாவது குதிரை, பன்றி, கோழி புறா முதலியவைகளை விட்டுவைக்கக்கூடாது.

தொழுவமானது வெகு சுத்தமாய் வைக்கப்படவேண்டும். தரை யானது கெட்டியாகவும் ஜலமலம் முதலியவை ஊராதிருக்கும் படி யாகவு மிருக்க வேண்டும். சுவர்களையும் மச்சுக்களையும் 6 மாதங் களுக்கு ஒரு விசையாவது சுண்ணாம்படிக்க வேண்டும். சாணத்தை தினம் இரண்டு தடவைகளுக்குக் குறையாமல் அப்புறப்படுத்த வேண்டும். கால்வாய் முதலியவற்றை நன்றாய் ஜலத்தைக்கொட்டி அலம்பவேண்டும்.

தொழுவத்தில்வைக்கோல் முதலிய தீனிகளை வைக்கக்கூடாது. எப்பொழுதும் தொழுவம் சுத்தமாயிருக்கவேண்டும். பாலை கறக்கும் பொழுதாவது அதற்கு முன்னராவது தூசிகிளம்பும்படி தொழுவத்தைப் பெருக்கக்கூடாது. அதில் வைக்கோல் உதிரக்கூடாது.

கறந்த பிறகு பாலைத் தொழுவத்தில் வெகு நேரம் வைக்கக் கூடாது, அதை தூசி தும்பு இல்லாத இடத்தில் கொண்டுபோய் வடிகட்டிக் குளிர்ச்சியாய் வைத்து வைக்கவேண்டும்.

பால் பாத்திரங்கள் கையை உள்ளே விட்டுக்கழுவும்படி வாயை அகலமாய் உடைத்தாயிருக்க வேண்டும். உபயோகித்தான பின்பு அவைகளை ஈரத்துணியினால் துடைத்து சுத்தம் செய்து செவ்வையாய் அலம்பி கடைசியில் கொதி ஜலத்தைவிட்டுச் சூடாக்கவேண்டும். பால் பாத்திரங்களைச் சுத்தம் செய்வதற்காக உபயோகிக்கப்படும் துணிகளை சுத்த ஜலத்தில் நனைத்துப்பிழிந்து தினம் ஒரு தரம் அவற்றை வேக வைக்கவேண்டும்.



பால் கரக்கப்படுகிற பாத்திரங்கள் பால் கறப்பதற்கே உபயோகிக்கப்பட வேண்டுமே தவிர மற்ற விதங்களிலும் உபயோகிக்கப் படக் கூடாது.

பாலை வடிக்கட்ட நல்ல சல்லடைவேண்டும். அதை செவ்வையாய் வைத்திருக்க வேண்டும். மஸ்லின் முதலிய தகுந்த வஸ்துவை அத்துடன் உபயோகிக்க வேண்டும். உபயோகித்தபின் அந்த மஸ்லினைத் தோய்த்துக்கழுவிக் கொதி ஜலத்தில் போட்டு அலசி உணர்த்த வேண்டும். (ஆரோக்கிய தீபிகையிலிருந்து திரட்டப்பட்டது.)

# தோட்டத் தொழில்.

## சென்னைப் புலால் மறுத்தல் சங்க விரிவுரையாளர்

திரு. கா. சி. சிவசங்கரமுதலியார் எழுதுகிறார்.

நான் அறிவடைந்த தொடக்கத்தில் நமதுநாடு இருந்த நிலையையும் இப்போது நமது நாடு இருக்கின்றநிலையையும் ஒத்திட்டுப்பார்த்தால் உள்ளங்கலங்குகின்றது. ஆங்கிலம் சிறிது கற்றோர்கள் முன்னர் நல்ல வருவாய் பெற்று சுகமாய் வாழ்ந்துவந்தார்கள். முன்னர் ஐயாயிரம் வாங்கிக்கொடுத்த ஆங்கிலம் இப்போது ஐம்பது கூட வாங்கிக்கொடுப்பதில்லை. மாடுவிற்று வீடுவிற்று தோட்டம் விற்று வயல்விற்று பொருளையிழந்து பொன்னையிழந்து இரவெல்லாம் விழித்து உடம்பிளைத்து ஆங்கிலங்கற்ற பட்டதாரிகள் எங்கேவேலை கிடைக்கும் எங்கேவேலைகிடைக்கும் என்று ஏங்குகின்றார்கள். அப்படிவருந்தித்தேடி ஒருசிறிய வருவாய் பெற்றாலோ நகரவாழ்க்கையில் நல்ல நெய், பால், மோர்கிடைப்பதும் உரமுள்ளகைக்குத்தல் அரிசிகிடைப்பதும் அருமையா யிருக்கின்றது. பெரும்பாலும் கொழுப்புநெய்யும், பொட்டு புண்ணாக்கினாலுண்டாகிய நுரைப் பாலும் புளித்தமோரும் கிடைக்கின்றன. இவைகளால் உடம்பு கெடுவதுமல்லாமல் நகரத்தில் போதுமான மரஞ்செடிகொடிகளில் லாததாலும், மலநீர்கள் வீட்டிற்குள்ளேயே கழிக்கின்றபடியாலும், தெருக்களிலே மூத்திரங்கள் பேய்வதாலேயும் காற்று கெட்டுப்போவதல்லாமல் மோட்டார்க்கார்கள் செல்லுவதால் எழும் தூசும் காற்றுடன் சேர்ந்து நுரையீரலிற் புகுந்து உடம்பை முற்றிலும் கெடுக்கின்றது. பலங்கொடுக்கக்கூடிய கேழ்வரகு, கம்பு, தினை, சோளம், வரகு முதலியவை யுண்பது குறைவென்றும் மிஷினிற் குத்திய வெளுத்த அரிசிச்சோறு உண்பது தான் நாகரிகமென்றும்

மக்களுக்கு எண்ணம் உண்டாய் விட்டது, அதனால் உடம்பிற்குவேண்டிய இரத்தம் உண்டாவதில்லை. காபி, டீ, கலர், சோடா, சுருட்டு, பீடி, சிகரட்டு, புகையிலை, பொடி, பீர், ஓபின், பிராந்தி, உஸ்கி முதலியவைகளின் பழக்கம் பல மக்களை இளமையிலேயே எமபடர்கள்போல் தொடர்கின்றன. இக்காரணங்களாலேயே நமது நாட்டில் சராசரி வயது இருபத்து நான்காய் குறைந்து விட்டது, ஐரோப்பாவிலே சராசரி வயது ஐம்பத்தைந்து, அமெரிக்காவிலே சராசரி வயது அறுபது உடம்பைக் கெடுக்கும் மாமிச உணவையுண்டு குடற்கட்டியாலும், பிளவை நோயாலும் ஆயிரங்கணக்காய் அந்தகனூர் செல்லும் மேனாட்டார் வயது ஐம்பத்தைந்து அறுபதாய் இருக்க சூரிய வொளி நிரம்பியதாய், இருந்துக் குளிக்க பல தடாகங்களையுடையதாய் தோப்புகளும் வயல்களும் நிரம்பியதாய் மரக்கறி யுணவையே பெரிதும் விரும்பியுண்ணும் மக்களையுடையதாய், பிராணயாமம் (மூச்சுப் பழக்கம்,) வாயுதாரணை, வாசியோகம் என்கிற அரிய பெரிய யோகா சித்தியின் உண்மைக் குணத்தையுணர்ந்த பெரியோர்கள இங்கும் அங்கும் இப்போதும் ஒவ்வொருவர் இருக்கின்றபாக்கியத்தை பெற்றதாய் உள்ள இந்தியாவில் சராசரி வயது இருபத்தைந்து என்று நினைக்கும் போது வயிறு பகீரென்கிறது, நெஞ்சம் துடிக்கின்றது. இவைகளின் உண்மைகளைக் கற்பிக்கும் பாடசாலைகள் இப்போது மிகுதியும் வேண்டும். விலையுயர்ந்த மாணிக்கம் சாணைபிடித்தால் ஒளி மிகுவது போலும் விலை குறைந்த இரும்பும் கைப்பழக்கத்தால் பளபளப்பாவது போலும் மக்கள் கல்வியினால் தான் அறிவைப் பெறுகின்றார்கள். ஆனால் பொய்க்கல்வி வஞ்சகக்கல்வி, நாஸ்திகக் கல்வி கூடாது. நகரமக்களெல்லாரும் நகரத்தின் இழிவையுணர்ந்து நாட்டுப்புறங்களை, கிராமந்தரங்களைநாடிக் குடியிருக்கவேண்டும், அங்குள்ள தூய காற்றில் வாயுதாரணை செய்து உடம்பிலுள்ள எழுபத்திரண்டாயிர நாடியையும் உள்ளுடம்பின் ஆறு தரங்களிலுள்ள ஐம்பத்தோரு நாடிகளையும் அத்தூய காற்றால் நிரப்பி நாடோறும் பழக வேண்டும். மிஷின்அரிசியை வெறுத்து நவ தானியங்களையும், கீரை, காய் கறி, பழம், கிழங்கு, கொட்டை, தேங்காய் நிலக்கடலை முதலியவைகளையும் உண்ணப்பழக வேண்டும், கல்லூற்றுத்தண்ணீர், கந்தகத் தண்ணீர், அபரேக்குத்தண்ணீர், இரும்புச்சத்துத்தண்ணீர், செம்புச் சத்துத்தண்ணீர், சுண்ணாம்புத்தண்ணீர், செம்மண் தண்ணீர், வெண்மணல் ஊற்றுத்தண்ணீர், முதலிய நாட்டேக்கிணற்று ஊற்று நீர்களில்



சதா உழைத்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு ஓய்வு வேண்டுவது எவ்வளவு முக்கியமோ அதுபோல நூற்றாண்டுகளாக விளைந்துகொண்டுவரும் பழையதோட்டங்களுக்கும் வயல்களுக்கும் ஓய்வு வேண்டும், அவைகளைக்கரம்பாக விட்டு, புதியகிராமங்களை யுண்டாக்கவேண்டும். காடுகளைத்திருத்திப் புதிதாக புன்செய் நிலங்களும், தோட்டங்களும் "திருத்தவேண்டும். அதனால்தான் ஔவையார் பூமி திருத்திபுண்" என்று திருவாய் மலர்ந்தார் முன்னே நூறு கலம் விளைந்த வயல் இப்போது முப்பது கலந்தான் விளைகிற தென்று எவ்வளவு குடிகள் குறைகூறுகின்றார்கள். ஒரு நிலத்தில் மாறுபடாது ஓரே விதப் பயிரை ஆண்டுதோறும் வைத்து வந்தால் அது ஓரே வித சத்தையுண்டு அந்நிலத்தை அப்பயிருக்கு உதவியில்லாதுசெய்து விடுகிறது. முதல் தடவையில் பதினாறு பாரம் வெல்லம் உண்டாக்கிய கரும்பு நிலம் ஐந்தாவது முறையில் ஆறு பாரம் வெல்லந்தான் கொடுக்கிறதென்றால் ஒரு நிலத்தில் ஓரேவகைப்பயிர் செய்வதின் தீமை நன்கு விளங்கவில்லையா? காடுகளைத்திருத்தி தோட்டமாக்கி, வாழை, மெலன் வெள்ளரி, பிச்சைக்காய், உளுந்து, காருமணி, தக்காளி. முட்டைகோஸ், புளியாரை முதலியவைகளை ஏராளமாய்ப் பயிரிட வேண்டும். ஆங்கிலம் கற்று வேலையுண்டோ வேலை என்று ஊரூராய் அலைவதை விட்டு எல்லாரும் தோட்டப் பயிர்செய்யத் துணிந்து முன் வரவேண்டும்.

நகரத்தலே விறகு மட்டில் ஒரு குண்டு முக்கால் ரூபாய் கொடுத்து வாங்கவேண்டியிருந்தால் மற்றவைக்கு என்னகதி? அநேகமாய் சென்னைக்குச் சமீபமாயிருந்த சவுக்குத் தோட்டங்களெல்லாம் வெட்டப்பட்டன. இனி காட்டு மரங்களை ஏராளமாய் வெட்டி சென்னைக்கு அனுப்பிவர வேண்டும். ஒரு இராத்தல் மாமிசத்திலுள்ள இரும்புச் சத்தைக் காட்டிலும் ஒரு இராத்தல் கீரையில் சுத்தமான நல்ல இரும்புச்சத்து அதிகம் இருக்கின்றது. அதைப்போல மூன்றத்தனை பங்கு நல்ல இரும்புச்சத்து அரிசித் தவிட்டில் இருக்கின்றது. ஒரு இராத்தல் மாமிசத்திலுள்ள, யூரிக்ஆசிட் என்றும்நெஞ்சு கலந்த உடல்வளர்க்குஞ்சத்தைக் காட்டிலும் ஒரு ஆழாக்கு நல்ல பாலில் சுத்தமான உடல் வளர்க்குஞ்சத்து அதிகமிருக்கிறது. மீனுணவில் பாஸ்பரஸ் அதிகமிருக்கிற தென்றும் அதை யுண்போர்க்கு ஞாபகசக்தி யதிக மூண்டென்றும் ஐரோப்பாவிலே சொல்லிக்கொண்டு வந்தார்கள். சமீப ஆராய்ச்சியினாலே

| | | |
|---|---|---|
| மீனில் பாஸ் பாஸ் 1000த்தில் | 13 | பங்கும் |
| முட்டை கோஸில், காலி பிளவரில் | 17 | „ |
| வெள்ளரிக்காயில் | 20 | „ |
| மோரில் | 22 | „ |
| அரிசித் தவிட்டில் | 23 | „ |

இருக்கிறதென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். வெள்ளரிக்காய், முட்டைகோஸ், தக்காளி முதலியவைகளை தோட்டத்தில் வளர்க்க வேண்டுமென்று முன்னமே சொன்னோம். இனி நல்ல மோரும் பாலும் கிடைக்க வேண்டுமே. அதற்காக பல தோட்டங்களில் புல் வளர்த்து எருமைகளையும் பசுக்களையும் ஏராளமாய் வளர்க்க வேண்டும். நமது நாட்டில் இப்போது வேண்டிய தொழில், தோட்டப்பயிரும் கறவை வளர்த்தலுமே. "கைவினை கரவேல்" என்று ஔவையார் திருவாய் மலர்ந்தது போல் பரம்பரைத் தொழிலை மறவாது செய்துவரும் ஐவகைக் கம்மாளரும், மூவகை வணிகரும், குயவர், வண்ணார், நாவிதர் முதலியவரும் கொல்லர் முதலியவரும் தக்க வருவாய் பெற்று வாழ்கின்றார்கள்.

நகரத்திலே பால்கறந்து விற்போர் பொட்டு, புண்ணாக்கு வைத்து பலனற்ற நுரைப்பாலை மக்களுக்குக் கொடுத்து அவர்களைக் கெடுப்பது மல்லாமல் கன்றுக்குப் பால்விடாது கன்றுகளைக் கொன்று அப்பாவத்தையுங் கட்டிக்கொண்டுபசுக்களையும் வரடானவுடன் அடிமாட்டிற்குக் கொடுத்து பெரும் பாவத்தை யடைகின்றார்கள். இவ்விரண்டு தொழிலையும் வளர்ப்பதற்காக ஆங்காங்கே சங்கங்கள் தோன்றி கூட்டுறவுச் சங்க உதவிபெற்று காம்புகளை சர்க்காரிடம் பெற்று, காய் கனித்தோட்டங்களையும், புல் தோட்டங்களையும் உண்டாக்கி எருமைகளையும் பசுக்களையும் வளர்த்து கிராமங்களிலே குடியேறி யோகபாடசாலைகளை உண்டாக்கி வாசியோகம் கற்றுக் கொண்டு காய் கனி தானியம் பால் மோர் உண்டு மனக்கவலையற்று ஆண்டவனை இவ்வுடம்பிலுள்ள போது அடைந்து இன்பவாழ்வு பெறுவோமானால் நோயற்ற உடம்போடு முன்னூறாண்டு உயிர் வாழலாம். எல்லாம் வல்ல இறைவன் இவ்வெண்ணத்தைக் கைகாட்டுவான், அவன் இணையடிகளை மனமொழி மெய்களால் வணங்கி வாழ்த்துகிறேன்.



# கூட்டுறவு முதல்நூல்

எச்சு. எல். காஜி எம். ஏ., பி. எஸ் சி; ஐ. இ எஸ்., ஜே. பி., சிடி புக்கம்பனி, போஸ்டு பாக்ஸ் 283 சென்னை.

பம்பாயில் கூட்டுறவு இயக்கம் எவ்வித நன்மைகளை விளைவித்திருக்கிறதென்றும் இனி அது எவ்வளவு நன்மைகளை விளைவிக்கக் கூடுமென்றும், சங்கங்களை நடத்துவதில் எவ்விதக்கஷ்டங்களிருக்கின்றனவென்றும் அக்கஷ்டங்கள் எவ்விதமாக நிவர்த்திக்கப்படக் கூடுமென்றும் வெகுதெளிவாக ஆசிரியர் காஜி அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார். ஆங்கிலத்தில் இந்நூல் வெளியாயிற்று. அது இனியதமிழில் யாவரும் கற்று தெரிந்துகொள்ளும்படியாய் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் தத்துவங்களையும், கூட்டுறவு முயர்ச்சிகளையும் கற்றறிய முயலுவோர் அனைவற்கும் இந்நூல் மிக உபயோகமானது. சென்ற 25 வருஷங்களாக கூட்டுறவு இயக்கம் நமது தேசத்தில் வழங்கிவந்தும் வெகு வெகு பெயர்கள் அதன் உபயோகங்களை அறியாமல் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஆசிரியர் காஜி அவர்களின் நூலைப்படிப்பார்களாகில் அவர்கள் கூட்டுறவில் ருசியைவஹிப்பார்களென்பதிற் சந்தேகமில்லையாதலால் அந்நூலின் சிலபாகங்கங்களின் ஸாராம்சத்தை இங்கு எடுத்துரைக்கிறோம் :—

ஜனங்களுக்கு சிக்கன வாழ்க்கை, பணேவலிமை, பரஸ்பர ஸஹாயம் முதலியகுணங்களைப் புகட்டி அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே கூட்டுறவியக்கத்தின் நோக்கமாகும்.

இந்தியர்களில் பெரும்பாலர் வியவஸாயத்தையும் அதைச் சேர்ந்த சிறுதொழில்களையும் கைக்கொண்டிருக்கிறார்கள். இந்திய வியவஸாயிகள் கல்வியில்லாதவர்கள். அவர்கள் மீளாக்கடன்களினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வட்டிகொடுப்பதிலேயே அவர்களுடைய வருமானத்தின் பெரும்பாகம் செலவழிந்து போய் விடுகிறது. பணம்போதாமையால் வியவஸாய முயர்ச்சிகள் திருப்திகரமாக நடத்தப்படுகிறதில்லை. வியவஸாய அபிவிருத்தியும் பின்னடைகிறது. ஆகவே, வியவஸாய முயர்ச்சிகளின் நிமித்தமாக அப்போதப்போது ஏற்படும் பணமுடைகளுக்கு ஏற்றபடி குறைந்த வட்டியின் பேரில் கடன்கொடுத்து உதவவேண்டுமென்பது நமது தேசக் கூட்டுறவியக்கத்தின் முக்கியநோக்கமாயிற்று, நமது தேசத்தில் சுமார் 60,000 கூட்டுறவு சங்கங்களிருக்கின்றன.

"எல்லோருக்கும் ஒருவனும் ஒருவனுக்காக எல்லோரும்" உழைக்க வேண்டுமென்பது தான் கூட்டுறவு உணர்ச்சி.

பொருள்களை விளைப்பவர்கள் அவற்றைவிற்பதில் சரியான லாபங்களை அடைகிறதில்லை. பொருளை விளைப்பதற்கு இரண்டு சாதனங்கள் தேவை. ஒன்று பணம்; மற்றொன்று மனிதர்களின் ஊழியம். பணமுதல்களின் நிமித்தம் வட்டி கொடுக்கப்படவேண்டும், மனிதர்களின் ஊழியநிமித்தமாகக் கூலிகொடுக்கப்படவேண்டும். தொழில்களில் அடையப்படும் லாபங்களிலிருந்து மேற்கூரிய செலவுகள் செய்யப்பட்டபின்பு ஏராளமான பணம் இன்னும் நிற்கிறது. அப்பணத்தை தொழில் ஸ்தாபனங்களில் பங்குகளை வஹிக்கும் தனவான்கள் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். பணமுதலுக்காகவும் வேலைசெய்தவர்களின் ஊழியத்திற்காகவும் சரியானபடி பங்கீடுசெய்யப்பட்டபின்பு மிகுதியாக நிற்கும் லாபமானது அவ்விரண்டுக்கும் பொறுப்புக்குத்தக்கபடி பாகிக்கப்படவேண்டுமென்று கூட்டுறவு தத்துவம்போதிக்கின்றது.

கிராமங்களிலுள்ள வியவஸாயிகள் தானியங்களை விளைக்கிறார்கள், பட்டணவாஸிகள் அவைகளை வாங்கி உபயோகிக்கிறார்கள். இவர்களின் மத்தியில் வியாபாரிகள், மொத்தமாக வாங்கிவிற்பவர்கள், சில்லரைக்கடைக்காரர்கள் முதலியவர்களிருக்கிறார்கள். பொருள்களை வாங்கி உபயோகிக்கிறவர்கள் அவைகளின் நிமித்தம் அதிகவிலைகளைக் கொடுக்கிறார்கள். பொருள்களை விளைப்பவர்கள் அவைகளைக்குறைந்த விலைக்கு விற்கிறார்கள். மேற்சொல்லப்பட்ட மத்தியிலுள்ளவர்கள் அளவற்ற லாபங்களையடைகிறார்கள். பொருள்களை விளைப்பவர்களும், அவைகளை உபயோகிப்பவர்களும் கஷ்டங்களையடைகிறார்கள். ஆனபோதிலும் மத்தியிலிருக்கப்பட்டவர்களை அடியோடு எடுத்துவிடவேண்டுமென்பதே கூட்டுறவின் கருத்தன்று. அவர்கள் விளைப்பவர்களிடத்திலிருந்தும் கடைசியில் வாங்கி உபயோகிப்பவர்களிடமிருந்தும் அதிகலாபங்களை அடையக்கூடாது, விளைப்பவர்களே அதிகலாபத்தை அடையவேண்டும், பொருள்களைக்கடைசியாகவாங்கி உபயோகிக்கிறவர்கள் அவைகளின் நிமித்தம் அதிக விலைகளைக் கொடுக்கும்படியாயிருக்கக்கூடாது—என்பது கூட்டுறவின் கருத்து. இந்நிலைமையைச் சாதிப்பதற்காக விளைவிப்பவர்களுக்குத்தமது பொருள்களை விற்பதற்கும், உபயோகிப்பவர்களுக்குத்தமது பொருள்களை வாங்குவதற்கும் சாதகமான அமைப்புகளை கூட்டுறவு இயக்கம் உண்டாக்க முயலுகிறது.



கூட்டுறவு இயக்கமானது ஜனங்களின் வாழ்க்கையைச் சிறப்பிப்பதோடு அவர்களுடைய குணங்களையும் சீர்படுத்துகிறது. கூட்டுறவு தத்துவத்தை யுணர்ந்தவர்களுக்குப்பணம் பெரிதல்ல. அவர்கள் எளியவர்களைக் காப்பாற்றி அவ்வெளியவர்கள் தமது கஷ்டத்திற்கேற்றபடி கூலிகளை யடையவேண்டுமென்று கருதுகிறார்கள்.

கூட்டுறவு இயக்கமானது நமது தேசத்தில் 25 வருஷங்களாக முயர்ச்சி செய்கிறது. பல மஹாணங்களிலும் ஸமஸ்தானங்களிலும் சங்கங்களின் ஸங்கியை அதிகமாகிக்கொண்டுவருகிறது. கூட்டுறவு லேவாதேவிசங்கங்கள் வியவாஸாயிகளுக்குத்தமது தொழிலின் நிமித்தமாக அந்தந்த காலத்தில் பணமுடைகளுக்குத்தக்கபடிக் கடன்களைக்கொடுத்து உதவுகின்றன. ஸங்கங்கள் ஏர்பட்டிருக்கும் ஸ்தலங்களில் ஸாவுகாரர்களின் வட்டி விகிதங்களும் குறைந்திருக்கின்றன வியவஸாயிகள் தங்களுடைய தாழ்ந்த நாணய நிலைமையை நன்கு உணர ஆரம்பித்து விட்டார்கள். சங்கங்களின் மெம்பர்கள் நாளடைவில் நற்குண நல்லொழுக்கங்களை அடைந்துவருகிறார்கள். கூட்டுறவு இயக்கமானது பொதுஜன இயக்கமாகவே இருந்து வருகிறது. கவர்மெண்டாரின் ஸம்பந்தம் அதை ஓங்கச்செய்வதில் வழிகாட்டுவதற்காகவேதான். நாளடைவில் அதுப்பொதுக் கூட்டுறவாளரின் வசம் ஒப்பிவிக்கப்படும்

வியாபார பாங்கிகள் வியவஸாயத்திற்கு நாணயஉதவியைப் புரிகிறதில்லை. வியவஸாயத்திற்குச்சிறு கடன்களேதேவை. நபர் ஜாமீனின் பேரில்தான்கடன்கொடுக்கும்படி யாயிருக்கிறது. ஆகவே, அவைகள் வியவசாய லேவாதேவியை யெடுத்துக் கொள்கிறதில்லை. நமதுதேசத்தில் வியவஸாயிகளுக்குக் கடன்கள் மூன்று வழிகளில் கிடைக்கின்றன: (1) கவர்மெண்டார் குறைந்த வட்டியின் பேரில் குறிப்பிட்டகாரியாதிகளுக்கு வியவஸாயிகளுக்குக் கொடுக்கும் தக்காவிக்கடன்கள்; (2) ஸாவுகார்கள் அதிகவட்டியின் பேரில் கொடுக்கும் கடன்கள், (3) ஸெண்டிரல் பாங்கிகளிலிருந்து கூட்டுறவு ஸங்கங்கள் பணங்களைப்பெற்று மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடன்கள். நம்முடையதேசத்தில் வியவஸாயிகளுக்கு அகப்படும் கடன்களில் எட்டில் ஒருபாகம்தான் கூட்டுறவு ஸங்கங்களினால் கொடுக்கப்படுகிறது. ஆகவே, மீதி ஏழுபாகங்கள் சாவுகார்களிடமிருந்து தான் கிடைக்கின்றதாதலால் கிராமச் சாவுகார்கள் செல்வமுக்கியமான மனிதர்களாக ஏற்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கம் பரவிவிட்டால் சாவுகார்கள் குறைந்தவட்டியின் பேரில் கடன்களைக்

கொடுப்பார்கள், வியவஸாயிகளும் அவர்களை அதிகமாக நாடமாட்டார்கள்.

கூட்டுறவுலேவாதேவிச்சங்கங்கள் பணஉதவிசெய்வதில் தங்களுடைய மெம்பர்களுக்கு ஒருவருடத்தில் அந்தந்த காலங்களில் தேவையானதொகைகளைத்தான் கொடுக்கக்கூடியவை. நிலச்சீர் திருத்தத்திற்காக அவைகள் நீண்டகாலக் கடன்களைக்கொடுக்கக் கூடியவைகளல்ல. கிராமக் கூட்டுறவு லேவாதேவிச் சங்கங்களில் நல்லவர்கள், கெட்டவர்கள், சிக்கனமாயுள்ளவர்கள், உதாரித்தனமாய்ச் சிலவு செய்கிறவர்கள் ஆகிய பல ஜனங்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் கூட்டாகசேர்ந்து மொத்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்விதப் பொறுப்பைதான் கடன் கொடுப்பவர்களும் டிபாஸிடர்களும் சிறந்த ஆதாரமாக ஏற்றுக்கொள்வார்கள். இதை உத்தேசித்தே பொது ஜனங்களும் சங்கங்களில் நம்பிக்கையை வைப்பார்கள். ஒவ்வொருசங்கத்திலும்ஒவ்வொரு மெம்பரும் தங்களுடைய சகோதர மெம்பர்களின் யோக்கியதைகளை நன்கு அறியக்கூடும். தவருதலான நடத்தையுடைய மெம்பர்கள் ஒருசங்கத்தில் இருந்தால் அவர்களை மற்றவர்கள் சரியான நடத்தையில் அமைப்பார்கள். சங்கங்கள் நன்றாய் நடைபெறும்.

கடன் விண்ணப்பங்கள் சரிவர ஆராய்ச்சி செய்யப்படவேண்டும், கடன் தொகைகள் கடன் விண்ணப்பங்களில் கண்டகாரியங்களுக்கே செலவிடப்படவேண்டும். கடன்களைக் கொடுப்பதற்குமுன்பு அவைகள் விண்ணப்பதாரர்களுக்குத் தேவைதானாவென்பது சங்கத்தாரால் ஆலோசிக்கப்படவேண்டும்.

சில கிராம லேவாதேவிச்சங்கங்களில் நிர்வாஹஸ்தர்கள் தமது கடமைகளைச்சரியாகநடத்துகிறதில்லை. மஹாஜன ஐக்கியமும் ஜில்லா ஐக்கியங்களும், தாலூகா ஐக்கியங்களும் ஏற்பட்டு கிராம லேவாதேவிச்சங்களின் முயர்ச்சிகளை மேம்பார்வையிடவேண்டும்.

கிராமச்சங்கங்களால் கொடுக்கப்படும் கடன் தொகைகள் குறிப்பிட்ட காரியாதிகளுக்குப் போதாமல் போகின்றன. வியவஸாயிக்கு கொடுபடும் கடன் அவனுடைய காரியத்திற்குப் போதாமல் போனால் அவன் அப்பணத்தை வேறு காரியத்திற்கு உபயோகிக்க முயலுவான். மேலும் அவன் சாவுகாரிடத்தில் சிக்கிக்கொள்வான். கூட்டுறவின் நோக்கமும் கெட்டுப்போய்விடும் ஆகவேஅவன் எதற்காகக் கடன் கேட்கிறானோ அக்காரியத்திற்குப்



மெம்பர்களுக்குச் சிக்கனத்தைப் போதித்து அவர்களைப்பணம் சேர்க்கும்படி செய்வது கூட்டுறவு லேவாதேவிச் சங்கங்களின் நோக்கம். சங்கங்கள் இதற்காகத்தான் டிபாஸிட்டுகளைப்பெறுகின்றன. ஆனால் டிபாஸிட்டுகள் மெம்பர்களிடமிருந்து சரியாய் வருகிறதில்லை. அதற்குக்காரணம் வியவஸாயிகளின் வியவஸாய வரும்படிகள் குறைவாக விருப்பது தான். அவர்கள் யோகக்ஷேமச்சிலவுகளை நடத்துவதற்கே வரும்படிகள் போதாமலிருக்கின்றனவாதலால் அவர்கள் பணத்தை மீற்றிச்சங்கங்களில் டிபாஸிட்டுகளாகவைக்கக் கூடுகிறதில்லை. ஆகவே, அவர்கள் வியவஸாயஅபிவிருத்திமுறைகளையநுஷ்டித்துச்சரியான வருமானங்களை அடையும்படிக்கும் ஓய்வுகாலங்களில் கைத்தொழில்களை யநுஷ்டித்து இதரவருமானங்களை யடையும் படிக்கும் முயர்ச்சிகள் கைக்கொள்ளப்பட்டால் தான் வியவஸாயிகளுக்கு அதிகவரும்படிகளுண்டாகும். அவர்கள் டிபாஸிட்டுகளை சங்கங்களிற்கு அநுப்பக்கூடும். ஒவ்வொரு தொழிலைநடத்துவதிலும் கூட்டுறவையநுஷ்டித்தால் சிலவுகள் குறையும், அதிகவருமானமும் உண்டாகும்.

கிராம லேவாதேவிச்சங்கங்கள் அபிவிருத்தி அடையவேண்டுமானால் அவைகளை ஜில்லாபாங்கிகளோடு அணைக்கவேண்டும். ஜில்லா பாங்கிகளும் மாஹாணத்தலைமை பாங்கியோடு அணைக்கப்படவேண்டும். இதனால் கூட்டுறவு இயக்கம் பலப்படும், ஏராளமான லாபங்களுமுண்டாகும். எல்லோரும் இவ்வியக்கத்தில் சேர்வார்கள்.

பலஜனங்களுக்கும் ஏற்படும் பொதுவானதேவைகளைத் திருப்தி செய்வதற்குக் கூட்டுறவு ஓர் சிறந்த வழி அந்தர்தகாலத்தில் வியவஸாயத்திற்கு ஏற்படும் செலவுகளுக்குக்கடன் கிடைப்பதினாலேயே வியவஸாயிகளின் கஷ்டங்கள் அற்றுப்போகிறதில்லை. வியவஸாயிகளுக்கு எரு, விதை, கருவிகள் கால்நடைகள் தேவையாயிருக்கின்றன. நிலத்தை அவர்கள் உழவேண்டியிருக்கிறது. விதை விதைப்பது முதல் அறுவடையாகும்வரையில் அவர்கள் பலவித முயர்ச்சிகளை நடத்த வேண்டியிருக்கிறது. பொருள்களைவாங்குதல், பொருள்களை விளைத்தல், விளைந்த பொருள்களை விற்றல் ஆகிய மூன்று வகைகளில் வியவஸாயிகளுக்கு கூட்டுறவு இயக்கம் உதவவேண்டும். ஆகவே கிராமங்களில் லேவாதேவிச்சங்கங்களிருப்பதோடு வியவஸாயிகளுக்கு விதை, எரு, கருவி முதலியவற்றை வாங்கிக்கொடுக்க ஒரு சப்ளை சங்கமும், எல்லோரும் ஒன்று சேர்ந்து தமது தொழிலை நடத்திப் பொருள்களை லாபகரமாக உண்டாக்க ஓர் கூட்டுப்பயிர் ஸங்கமும்

வியவஸாயிகளின் மாசூல்களை லாபகரமாக விற்றுக்கொடுப்பதற்காக ஓர் விற்பனைச்சங்கமும் ஏற்படவேண்டும். ஆனபோதிலும் சப்ளை முயர்ச்சிகளை லேவா தேவிச்சங்கங்களே செய்யலாம். லேவா தேவிச் சங்கங்கள் பணத்திற்குப் பதிலாகப் பொருட்களை வாங்கிக் கொடுக்கலாம்.

துண்டு நிலங்களை அவர் அவர்கள் தனித்தனியாய்ப்பயிரிடுவதைக்காட்டிலும் பலரும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுப்பயிர் சங்கமாக ஏற்பட்டு எல்லாத்துண்டு நிலங்களையும் கூட்டாகப்பயிரிடுவது லாபகரமாகும். அவர் அவர்கள் தனித்தனித்துண்டுகளை பயிரிடும் பக்ஷத்தில் ஒவ்வொருவரும் தனித்தனியாக வியவஸாயக் கருவிகளை வாங்கவேண்டியதாயிருக்கும். கூட்டாகப்பயிரிட்டால் அவ அவர்கள் அவைகளைக்கூட்டாக வே வாங்கிக்கொள்ளலாம், செலவு குறையும், நீர்ப்பாச்சலில்தகரார் இருாது, எரு விதைமுதலியவைகள் சரிவர உபயோகிக்கப்படலாம். மாசூல்களின் தரமும் மேன்மையையடையும், லாபம் அதிகமேற் படும், மாசூல்களை லாபகரமாக விற்பதும்கூடும்.

வியவஸாயிகள் விளைக்கிற மாசூல்களை நல்லவிலைக்குவிற்க ஏற்பாடுகள் வேண்டும். மாசூல் விற்பனைச்சங்கங்கள் ஏற்படவேண்டும். விற்பனைக்கூட்டுச்சங்கங்கள் ஏற்பட்டால் அவைகள் விலைவாசிகளை அறிந்துகொண்டுமாசூல்களை அதிகச்சிலவின்றி தக்கவிலைக்கு விற்கக் கூடும். பலவிடங்களிற்கு அவைகளை விற்பனைக்கு அநுப்பகூடும். வியவஸாயிகள் தற்போதுபோல்அறுவடையானஉடனேயே வரிகட்ட வேண்டிய நிமித்தமாகவோ அல்லது. வேறு காரணங்களினாலோ மாசூல்களைவிற்று விட வேண்டியிருாது. விற்பனைச்சங்கங்கள் பெரிய களஞ்சியங்களைக்கட்டி மாசூல்களைக்கட்டிவைத்துசரியானகாலங்களில் விற்கக்கூடும். அவைகள் மாசூல்களின் பேரில் வியவஸாயிகளுக்குப் பணமுடைகளுக்குக் கடன்களைக் கொடுக்கக்கூடும். விற்பனைச்சங்கங்கள் கிராமங்களில் ஏற்பட்டு தாலூகா, ஜில்லா, மாஹாணச்சங்கங்களோடு தொடுக்கப்பட்டு வேலை செய்யவேண்டும்.

பட்டணங்களிற்கு லேவாதேவிச் சங்கங்களும், பொருள் விற்பனைச் சங்கங்களும் வீடு கட்டிக்கொடுக்கும் சங்கங்களும், கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுச்சங்கங்களும், தொழிலாளிக் கூட்டுச்சங்கங்களும், உத்தியோகஸ்தர் ஸங்கங்களும் பிறபலமாக ஏற்படவேண்டும்.



## மயிர்.

நமது தேகத்திலுள்ள ஒவ்வொருமயிரும் சர்மத்தின் கீழுள்ள முளையிலிருந்து வளர்ந்து வரும் ஒரு குழாயில் அடங்கியுள்ளது. அதன் நிறமானது அந்தக்குழாயினுள் அடங்கியிருக்கும் வர்ணப் பசையின் நிறத்தைப்பொருந்தி யிருக்கிறது. அதன் மேல் பாகத்தின் ஒளியோ முளையைச் சுற்றியுள்ள சிறு கொழுப்பு சம்பந்தமான கோளங்களிலிருந்து உண்டாகிறது.

இயற்கையாகவே நிரம்ப மயிருள்ள தலையையுள்ளவர்கள் அவற்றை வெகு ஜாக்கிருதையுடன் பாதுகாக்க வேண்டும். அடிக்கடி அதை உஷ்ண ஜலத்தில் அலம்பி சர்மத்தை செவ்வையாய்த் தேய்க்க வேண்டும். பிறகு மயிரைச் சரியாய் உலர்த்த வேண்டும். தினந்தோறும் தேங்காயெண்ணையைத் தடவி தலைமயிரை வாரிவந்தால் மயிர் நன்றாயும், பளபளப்பாயும் வளரும். மலையாளதேசப் பெண்களின் மயிரின் அழகுஅவர்கள அதைத் தேங்காயெண்ணையைத் தடவி வாரி அதிக ஜாக்கிறதையாய்ப் பாது காப்பதால் தான் உண்டாகிறது.

அகாலத்தில் மயிர் நரைப்பது மனோவேஷ்டையினாலும் எப்போதும் உட்கார்ந்து வேலை செய்வதினாலும் உண்டாகக்கூடியது. சில சமயங்களில் சுண்டுகளினாலும் நரம்பு நோய்களினாலும் உண்டாகவும் உண்டாகிறது. சிலருக்கு பிறந்த முதற்கொண்டே மயிர் நரைத்துப் போவதுண்டு. அதற்குக்காரணம் மயிரில் சாயவஸ்து இல்லாமல்போவது தான். கடூரமான வியாதி கண்டிருந்தாலும் சில வேளை மயிர் நரைப்பதுண்டு. ஆனால் உடம்பு சொஸ்தமான பின் அவ்வித நரைமாறிவிடும். அதிக பயம், திகில் மனக்கவலை இவைகளினாலும் தலைமயிர் நரைப்பதுண்டு.

மயிர் சம்பந்தமான வியாதிகளினால் அகாலத்தில் தலை மொட்டையாகி விடுகிறது. இயற்கைக்கு விரோதமாய்த் தலையை அழுந்த மூடிவைப்பதினால் மயிர்க்குழாய்கள் விரிந்து உணவில்லாமல் மெலிந்து போகின்றன. வயிற்றுக் கோளாறுகள், பலஹீனம், தலைச்சுண்டு முதலியவைகளும் மயிர் நரைப்பதற்குக் காரணங்கள்.

## விவேக விசாரங்கள்.

நத்தைகளுள் ஆண் பெண் என்கிற வகைகளே கிடையாது. ஒவ்வொன்றும் ஆண் அவயவத்தையும் பெண் அவயவத்தையும் வஹிக்கிறது.

199388

முத்துச்சிப்பி நத்தையைப் போன்ற பூச்சி. அது தன் ஓட்டிற்கும் உடலுக்குமிடையில் மண்சிக்கிக் கொண்டால் ஓட்டின் உட்புரையிலுள்ள பிரகாசமான ஓர் வஸ்துவைப் பீச்சி அதை மூடும். இவ்விதமாகத்தான் முத்து உண்டாகின்றது.

பூச்சிகள் முட்டையிடுவதற்காக சில காய்களில் தங்களுடைய தமருசியைப்போன்ற அவயவத்தினால் துளைகளைச்செய்து கொண்டு அத்துளைகளில் முட்டையிடுகின்றன. கத்திரிக்காயில் புழு ஏற்படுவது இவ்விதமாகத்தான்.

வெண்ணத்திப்பூச்சியின் முட்டையிலியிருந்து கம்பளிப் புழுவும் வெளிவரும்.

பட்டுப்பூச்சியின் முட்டையிலிருந்து உரோமமேயில்லாத புழுவும் வெளிப்படும்.

ஈக்கள் சாணியில் இடுகிற முட்டைகளிலிருந்து சாணிப்புழுக்கள் வெளிப்படுகின்றன.

ஒருவிதப் பூச்சியின் எலும்புக்கூடே கடற்பஞ்சு.

நம்பிக்கை என்கிற செடியானது மனிதர்களின் மனதில் விரைவாகவளருகிறதில்லை.


# கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபி விருத்தியையும், பாஷாபி மானத்தையும் கருநியுமைக்கும் தேசிய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவொன்றே! இப்பத்திரிகையில் அரிய வியாசங்கள் இனிய நாவல்கள், நவீன நாடகங்கள், நீதி நூல்கள், செவிக்கினிய செய்யுட்கள், விடுகதைகள், விநோதக்கூற்றுகள், உலக வர்த்தமானங்கள் பிறபாஷைகளில் உள்ள அரிய விஷயங்களின் மொழிபெயர்ப்பு முதலியன இனிய எளிய தமிழில் வெளியாகும். ஒவ்வொரு ஆடவரும், பெண்டிரும், சிறுவரும், சிறுமியரும் சந்தா தாரராகச் சேருங்கள்! கலைமகளைப் படித்து கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குங்கள்!

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபாற் செலவுடன் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்கட்கு அணா-12 பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ரூ 1.

தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6
மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்,
வீ. கி. சௌகார்பேட்டை, சென்னை.




# கிராமச்சீரமைப்பு விஷயமும் கூட்டுறவும்.

பதினேழாவது சென்னை மஹாணக் கூட்டுறவினர் மஹாநாட்டில் திவான் பஹதூர்ராகவய்யா அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். அவர் கிராமச்சீரமைப்பு விஷயத்தில் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு நன்மைகளை விளைக்கக்கூடும் என்பதைக் குறித்து ஓர் சிறந்த உபந்நியாஸத்தை அம்மஹாநாட்டில்ச் செய்தார். அவ்வுபந்நியாஸத்தின் ஸாராம்சமாவது :—

நமது தேசத்தில் ஜனத்தொகையில் பத்தில் ஒன்பது பெயர்கள் கிராமங்களில் வஸிக்கிறவர்கள். அவர்கள் வியவஸாயத்தையே ஜீவனமாகக்கொண்டுள்ளவர்கள். அவர்கள் ஏழ்மைஸ்திதியிலேயே இருக்கப்பட்டவர்கள், மேலும் அவர்கள் கல்வியற்றவர்களாகவும், நோயினால் கஷ்டப்பட்டுக்கொண்டும், தங்களுடைய நிலையை உயர்த்திக்கொள்ள முயாச்சிகளைத் தேடாமலுமிருக்கிறார்கள். அவர்களின் க்ஷேமச்செல்வ நிலையை உயர்த்துவதற்கு கூட்டுறவு வழிகள் கிராம முயர்ச்சிகள் எல்லாவற்றிலும் அமையவேண்டும். நமது தேசத்தில் கூட்டுறவு இயக்கமானது 1904-ம் வருஷத்தில் கவர்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டது. அது நாளளவில் பல மடைந்து ஓங்கியிருக்கிறது. தற்போதில் நம்முடைய மாஹாணத்தில் ஏறக்குறைய 15,000 சங்கங்களிருக்கின்றன, அவைகளில் 9 லக்ஷம் அங்கத்தினர்களிருக்கிறார்கள். அவைகளின் மொத்த மூலதனம் 1500 லக்ஷ ரூபாய்களாயிருக்கிறது. மேற்சொல்லிய 15,000 ஸங்கங்களில் 12,000 ஸங்கங்கள் வியவஸாயச்சங்கங்கள். 31 ஸெண்டிரல் பாங்கிகளும் சென்னை ஸெண்டிரல் அர்பன் பாங்கியும் பண உதவியைச் செய்கின்றன. பொருள்களை வாங்குகிற வேலைகளையும், மாகுல்களை விற்பனை செய்கிற வேலைகளையும் 153 ஸங்கங்கள் செய்கின்றன 18 நில அடமான பாங்கிகள் இருக்கின்றன. வியவஸாய முன்னேற்றத்திற்காகவும், நீர்ப்பாசன சௌகரியத்திற்காகவும் பல தனித்தனி ஸங்கங்களுமிருக்கின்றன. 20 பால் ஸப்ளை ஸங்கங்களும், 60 கூலியாள் ஸப்ளை ஸங்கங்களும், 63 நெசவுக்காரர்களின் ஸங்கங்களும், பலதாழ்ந்த வகுப்பினர் ஸங்கங்களுமிருக்கின்றன.

இவ்வாறு கூட்டுறவு ஸங்கங்கள் உண்டானதினால் வியவஸாயிக்குப் பலவித சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவனுக்குப் பணம் கஷ்டமில்லாமல் கிடைக்கிறது. அவன் லேவாதேவிக்காரரை நாடி அதிக வட்டியைக் கொடுக்கும்படியாயில்லை. ஸேன்டிரல் பாங்கி

களில் ஜனங்கள் டிபாஸிட்டுகளை வைக்கிறார்கள். கிராமஜனங்கள் ஒன்று சேர்ந்து பல கிராமமுயர்ச்சிகளை அனுஸரிக்கிறார்கள்.

கூட்டுறவு இயக்கம் நம்முடைய மாஹாணத்தில் அதிக விரைவில் பரவியிருக்கிற தென்பதில்ச் சந்தேகமில்லை. ஆனபோதிலும் அது இன்னும் மேல்மேலும் பரவி அதிக வேலைகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால் மாஹாண ஜனத்தொகையில் 100–இல் 2 பெயர்கள் தான் கூட்டுறவினர்களாக விருக்கிறார்கள். பணம் நடுத்தர வகுப்பினர்களிட மிருந்து வருகிறதே யொழிய வியவஸாயிகளிட மிருந்து வருகிறதேயில்லை. வியவஸாயிகள் அற்ப வரும்படிகளை அடைவதால் அவர்கள் பணத்தைச் சேமித்துக் கொள்ளக்கூடு கிறதில்லை. கூட்டுறவு இயக்கமானது இன்னும் கிராம ஜனங்களால் சரிவர ஆதரிக்கப்படவில்லை. ஆகையால் கிராம ஜனங்களுக்கு அதிக தீவ்ரமாக கூட்டுறவு விஷயங்களில் பிரச்சாரங்கள் செய்யப்பட வேண்டும். கிராம ஜனங்கள் கிராமக்கூட்டுச் சங்கங்களை கவர்மெண்டு ஸ்தாபனங்களென்று பாராட்டாமல் தங்களுடைய சொந்த ஸ்தாபனங்களாகவே பாவித்து அவைகளில்ச் சேர்ந்து கொண்டு நன்மைகளையடையவேண்டும். கடைக்காரர்கள், தச்சன், கொல்லன், குருமான், முதலியவர்கள் கூட்டுறவை யனுசரிக்கவேண்டும். கிராம முயர்ச்சி ஒவ்வொன்றிற்கும் கூட்டுறவு அநுஷ்டிக்கப் படவேண்டும். பண்டை கால பஞ்சாயத்து வழிகளும் ஸமூகக்கூட்டு வாழ்வுகளைப் போன்ற வழிகளும் கிராமங்களில் அநுஷ்டிக்கப் பட வேண்டும்.

கூட்டுறவு இயக்கம்அதிக விரைவில் பரவியதில் கவர்மெண்டார் கணக்குத் தணிக்கை வேலையை மாத்திறம் வைத்துக்கொண்டு, மேல் பார்வை, நிர்வாஹம் இவ்விதவேலைகளை கூட்டுறவினர்களின் ஐக்கியங்களிடத்திலும் கூட்டுறவு ஊழியர்களிடத்திலும் ஒப்பிவித்திருக்கிறார்கள். மேற்ச் சொல்லிய ஐக்கியங்களும் ஊழியர்களும் சரிவர வேலைகளை நடத்துகிறதில்லை. கடன்கள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கடன்களை வாங்கியிருக்கிறவர்கள் அவைகளை திருப்பிக்கொடுக்காமலிருக்கிறார்கள், கடன் தொகையை எப்படி வசூலிக்கிறதென்கிற கவலைதான் கூட்டுறவு ஸ்தாபனங்களிற்குப் பெருங் கவலையாகிவிட்டது. இவ்வித நிலைமையிலிருந்து கூட்டுறவு இயக்கம் தப்பவேண்டுமானால் கூட்டுறவு இலாகாவின் உத்தியோகஸ்தர்களும், கூட்டுறவினர்களும், கூட்டுஸ்தாபனங்களின் சிப்பந்திகளும் ஏகோபித்து வேலைசெய்ய வேண்டும். கூட்டுறவு ஸ்தாபனங்களின் சிப்பந்திகள் சொர்ப்ப சம்பளக்காரர்கள், அவர்கள் நன்றாக வேலை செய்தால் அவர்கள் மேல்மேலும் உயர்ந்த சம்பளங்களையடையக் கூடுமென்பதுமில்லை. ஆகையால் அவர்கள் தங்களுடைய வேலைகளைச் சரியாய்ச் செய்கிறதில்லை. பல கூட்டு ஸ்தாபனங்கங்களும் ஒன்று சேர்ந்து கூட்டுறவு ஸ்தாபனசிப்பந்தி இலாகா வென்று ஒரு இலாகாவை ஏற்படுத்திக் கொண்டு அதில் சிப்பந்திச் சம்பளங்கள் படிப்படியாக உயரும்படியாக விதித்து சிப்பந்திகள் ஒருபொது உள்ச்சபையால் நியமிக்கப்பட்டால் திறமான நபர்கள் கூட்டுஸ்தாபன உத்தியோகங்களைப் பின்பற்றுவார்கள். வேலைகள் கிறமமாக நடக்கக்கூடும். இப்படி ஏற்படக்கூடிய சிப்பந்தி இலாகாவிற்கு சிப்பந்திகளை நியமனம் செய்வதில் தகுந்த நபர்கள் தான் நியமிக்கப்பட வேண்டும். நபர்கள் கல்வியையடைந்தவர்களாகவும், நன்னடத்தையையுடையவர்களாகவும் இருக்கவேண்டும் சரியான சிப்பந்திகள் கிடைக்கும் பக்ஷத்தில் கூட்டுஸ்தாபனங்கள் சிலவைவஹிக்கப் பின் வாங்கமாட்டா. தற்சமயத்தில் கூட்டுறவு ஸங்கங்களும், பாங்கிகளும் சிப்பந்தி சிலவுகளுக்காக பண வீதங்களை சரியாசச் செலுத்துகின்றன. அவைகள் இன்னும் அதிகப் பணங்களை இது விஷயத்தில் கொடுக்கக்கூடும். கவர்மெண்டாரும் சிப்பந்திச்சிலவு விஷயத்தில் அதிகப்பண உதவியைச் செய்யத்தயாராகவிருப்பார்கள்.



கிராமக்கூட்டுறவு ஸங்கங்களால் இருவகைக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. வியவஸாய முயர்ச்சிகளின் நிமித்தமாக வியவஸாயிகளுக்கும் தொழில்செய்வதற்காகத் தொழிலாளிகளுக்கும் கொடுக்கப்படும் சொற்ப காலக்கடன்கள் ஒருவகை. நிலச் சீர்திருத்தத்திற்காகவியவஸாயிகளுக்குக் கொடுக்கப்படும் நீண்டகாலக்கடன்கள் மற்றொருவகை. பொம்பாய் மாஹாணத்தில் முதல்வகைக்கடன்களை வசூலிப்பதில் யாதொருகஷ்டமும் ஏற்படுகிறதில்லையாம். நம்முடைய மாஹாணத்தில் இவ்விதக்கடன்களின் தொகைகள் வசூலாகாமலே இருந்துவருகின்றன. நீண்டகாலக்கடன்கள் நில அடமானங்களின் பேரில் கொடுக்கப்படுகின்றனவாதலால் சொற்பகாலங்களுக்கு ஸெண்டிரல் பாங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் டிபாஸிட்டுகளின் தொகைகள் அவ்விதக்கடன்களைக் கொடுப்பதற்கு உபயோகப்படமாட்டா. நீண்ட காலக்கடன்களுக்காக வென்று ஒரு தனிபாங்கு ஏர்படவேண்டும் ஆனால் அவ்விதபாங்குகள் ஏற்படுவதில் பல கஷ்டங்களிருக்கின்றன.

கிராமங்களில் வியவஸாயிகளுக்கு சொற்பகாலக்கடன்களும் தேவை, நீண்டகாலக்கடன்களும் தேவை. நீண்டகாலக்கடன்களால் அவர்களின் பழயகடன் கஷ்டங்கள் முழுவதும் அடைக்கப்படவேண்டும். அநேகவியவஸாயிகள் பழயகடன்களை சுமந்து கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் பயிர்முயர்ச்சிகளையும் யோகக்ஷேமங்களையும் சரிவர நடத்தக்கூடுகிறதில்லை. ஆகவே, நீண்டகாலக்கடன்களுக்காக ஏற்பாடுகள் நம்முடையமாஹாணத்தில் உண்டாகவேண்டும். வியவஸாயிகள் கூட்டுறவு உணர்ச்சிகளை வஹித்து, அதன் தத்துவங்களை நன்றாய் உணர்ந்து கொண்டு, கூட்டுறவினர்களாகி, சிக்கண வாழ்க்கையை யநுஷ்டித்துப் பணத்தைச் சேமித்துக்கொண்டு, நில அடமானபாங்கிகளில் டிபாஸிட்டுகளை வஹித்துக்கொண்டு, நீண்ட காலக்கடன்களுக்கு வேண்டிய திரவியத்தை உண்டாக்கவேண்டும். அதுதான் சரியான மார்க்கமாகும்.

கூட்டுறவுஸங்கங்களில் அங்கத்தினர்கள் பொது நல உணர்ச்சியுடன் பாடுபடவேண்டும். அவர்கள் ஸங்கங்களின் முயர்ச்சிகளில் அதிகசிரத்தையோடுமிருக்கவேண்டும். ஒவ்வொரு ஸங்கத்திலும் பொதுநல உணர்ச்சியுடனும் சிரத்தையுடனுமுள்ள அங்கத்தினர்கள் கிலர் இருக்கக்கூடுமாதலால் அவ்வங்கத்தினர்கள் மற்றவர்களுக்கு இடைவிடாமல் போதித்து அவர்கள் பொதுநல உணர்ச்சியை வஹிக்கும் படிச்செய்யவேண்டும். இப்படி ஒரு ஸங்கம் சீராகுமானால் இதர ஸங்கங்கள் அதைக்கவனித்து ஒழுங்குசெய்து கொள்ளக்கூடும், கூட்டுறவு இயக்கமே சரியான நிலையில் அமையும்.

கிராமங்களில் ஸங்கங்களிருக்கின்றன. கூட்டுறவுபோதனைகளை பெடரேஷன்கள் செய்கின்றன. பணம் ஸெண்டிரல் பாங்கிகளிடத்திருந்து கொடுக்கப்படுகிறது. ஐக்கியங்கள் ஸங்கங்களை மேம்பார்வையிடுகின்றன. கடைசி மூன்று அங்கங்களும் ஒத்துமை யுடன்பாடுபட்டாலொழிய கூட்டுறவு இயக்கத்தின் நிலை ஒழுங்காயிராது. ஒவ்வொருஜில்லாவிலும் இவைசம்பந்தமாக ஒரு நிர்வாஹ ஸபை ஏற்படவேண்டும், இப்படி ஏற்படும் எல்லா ஜில்லாச்சபைகளும் ஒரு மாஹாணச்சபை யோடு இணைக்கப்படவேண்டும். மாஹாணசபையும் ஜில்லாச்சபைகளும் கிராமச்கூட்டுறவு ஸங்கங்களைமேம்பார்வையிட்டு அவைகளைச்சரியான நிலையில் அமைக்கக்கூடும்.

கிராமங்களைச்சரியான செல்வக்ஷேமநிலையில் அமைப்பதற்கு கூட்டுறவு தான் தக்க சாதன மென்று எடுத்துக்காட்ட கிர்காம்



முயர்ச்சிகள் என்று சொல்லப்பட்ட கிராம முன்னேற்ற முயர்ச்சிகளையும் அலமூருவில் நடைபெரும் முயர்ச்சிகளையும் உதாரணமாகச்சொல்லலாம். கிர்காம் என்பது பஞ்சாப் மாஹாணத்தில் ஒரு கிராமம். சிறப்புவாய்ந்த இராஜப்பிரதிநிதி அவர்கள் அந்தகிராமத்தில் நடைபெரும் முயர்ச்சிகளைப் பற்றி வெகு உயர்வாகப் பேசியிருக்கிறார்

## ஈக்கள்

[காப்டன் என்.சேஷாத்ரிநாதன் அவர்கள் எழுதியது.]

நமது வீடுகளில் மாடிருந்தால் அது நமக்கு பால், தயிர், வெண்ணை இவைகளைக்கொடுக்கும். ஒரு நாயிருந்தால் அது வீட்டைத்திருடன் புகாமல் பாதுகாக்கும். ஈக்களிருந்தாலோ அவைகள் நோய்களைத்தான் உண்டுபண்ணும். நமக்குத் தெரியாமலே நாம் ஈக்களை வளர்க்கிறோம். நம்முடைய வீடுகளைச் சுற்றி நாம் குப்பைகளை எறிகிறோம், இன்னும் மலம் முதலிய அசுத்தபொருள்கள் நம்முடைய வீடுகளைச் சுற்றிக் கிடக்கின்றன. ஈக்கள் இவைகளை ஆகாரமாகக்கொண்டு இவைகளிலேயேவளருகின்றன. ஈக்கள் ஒருஇடத்தை அடைந்தால் அவ்விடத்திலிருந்து அவைகளை அப்புறப்படுத்துவதென்பது வெகுகஷ்டமான வேலையாகிறது. ஈவளர்வதில் மூன்று அந்தஸ்துகள் உண்டு :— முதல் அந்தஸ்து அது முட்டையிலிருந்து புழுவாக வெளிக்கிளம்புகிறது, இரண்டாவது அது ஓட்டையுண்டாக்கிக்கொண்டு அதிலிருந்து கொண்டு தன் அங்கங்களை வளர்த்துக்கொள்வது, மூன்றாவது ஓட்டை உடைத்துக்கொண்டு ஈயாக வெளிக்கிளம்புவது.

ஈயானது அளவுக்குமேல் உண்கிற ஜந்து. இப்படித்தின்றுவிட்டு வாயிலெடுக்கிறது. நம்முடைய சாப்பாட்டை யடைந்து அதில் வாயலெடுத்து அதில்நோயுண்டாகக்கூடிய வஸ்துக்களைக் கலந்துவிடுகிறது. மேலும், அது மலங்களின் மேல்தான் முட்டையிடுகிறது. அநேகமனிதர்கள் தொத்துநோய்களை யுடையவர்களாகையால் அவர்களின் மலங்களில் தொத்து நோய் மூலங்களிருக்கும். அந்நோய் மூலங்கள் ஈயின்கால்களில் தொத்திக்கொள்ளும். ஈ நம்முடைய உணவையும் ஜலத்தையும் அடையும்பொழுது அந்நோய் மூலங்கள் அதில் சம்பந்தப்படும். தொத்துநோய்கள் இவ்விதமாக உண்டாகின்றன. வாந்திபேதி, சீதபேதி, அஸ்தி ஜுரம், க்ஷயரோகம்

முதலியவை இவ்விதமாகத்தான் உண்டாகின்றன இந்நோய்களைத் தடுக்க வேண்டுமானால் நாம் ஈக்களை யொழிக்கவேண்டும், தவிரவும் அவைகள் உண்டாகாதபடியும்பார்த்துக்கொள்ளவேண்டும், அதாவது குப்பைகளும், மலங்களும் உடனுக்குடனே அப்புறப்படுத்தப்பட்டு எரிக்கப்படவேண்டும். கிராம ஜனங்கள இவ்விஷயத்தில்சிரத்தையை யெடுத்துக் கொண்டு சுகாதார உத்தியோகஸ்தர் களோடு ஒத்துழைத்தால் கிராமங்களில் நோய்கள் உண்டாகா.

## அரிசி

கைகுத்தல்என்பதே நின்றுபோய்விட்டது. முன்காலத்தில் கிராம ஜனங்கள் நெல்லைக்குத்தி அரிசியைத் தாங்களும் உபயோகித்து பிறருக்கும் விற்றார்கள். இப்பொழுது அவர்களும் நெல்லை மில்களில் அரைக்கிறார்கள். வைத்தியர்கள் மில்களிலரைத்த அரிசியைஉபயோகப்படுத்தவே கூடாதென்று முறையிடுகிறார்கள். கைக்குத்தரிசியில் அதிகப் போஷண அம்சங்களிருக்கின்றன வென்றும் அவ்வம்சங்கள் நெல்மில்லில் அரைக்கப்பட்டால் போய்விடுகின்றன வென்றும், மில்லினால் அரைக்கப்பட்ட அரிசி நோய்களை விளைக்கிறதென்றும் இடைவிடாமல்ச் சொல்லுகிறார்கள். மேலும், ஜனங்கள் அரிசியைச் சமையல் செய்வதில் ஜனங்கள் அதிகமாகக் கஞ்சியைவடித்து விடுகிறார்கள். அப்படிச்செய்வதினால் உலையில் போடுகிற அரிசியின் நிறையில் ஐந்தில் ஒரு பங்கு வீண்போகிறது. அதாவது ஒருசிறிய குடும்பத்துக்கு நாளைக்குகால்படி விகிதம் அதாவது மாசம் ஒன்றுக்கு 3 ரூபாய் அரிசிவீண்போகிறது, சாதமும் சத்தற்றதாய்ப் போகிறது. முற்காலத்தில் அரிசியைச்சமையல் செய்வதில் கஞ்சி அதிகமாக வடியும்படியாயிராமல் சமையல் செய்து வந்தார்கள். வடதேசத்தில் இன்றைக்கும் அப்படித்தான் அரிசியைச்சமயல் செய்கிறார்கள். அரிசியைக்கொதிக்க வைப்பதில் குக்கர்களில் போடுவதுபோல ஜலத்தைக் குறைவாகவைத்துக்கொதிக்கவைத்தால் சாதத்தின் நிறைகுறையாது, சத்தும் அற்றுப்போகாது, சாதம் உடம்புக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

## பாரெஸ்டு பஞ்சாயத்துகள்

ஒங்கோலில் நடைபெற்ற சென்ற மஹாநாட்டில் பாரெஸ்டு பஞ்சாயத்துச்சங்கம் என்று ஒருமாஹாணச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதென்பது நமது மாஹாணப் பாரெஸ்டு பஞ்சாயத்தார் அனைவற்கும் தெரிந்த விஷயமே. அச்சங்கத்தின் கௌரவகாரியதரிசி அவர்கள்



பஞ்சாயத்துகளை குறைகளையும், கஷ்டங்களையும் தெரிவிக்கும்படி ஒரு அச்சுப்போட்ட பாரத்தை அநுப்பி அதைப்பூர்த்தி செய்யும்படி அநுப்பினர். அநேகபஞ்சாயத்துகளிலிருந்து அந்த அச்சு பாரம் திரும்பிவரவில்லை. அதைஉடனே பூர்த்திசெய்து அடியில் கண்ட விலாஸத்திற்கு அநுப்பும்படி அப்பஞ்சாயத்துகளைக் கேட்டுக்கொள்கிறோம் :—

"சென்னை, மயிலாப்பூர், பிராடீஸ்ரோட் ரூரல்இந்தியா" பத்திராதிபர் பார்வையிட்டு சென்னை பாரெஸ்டுபஞ்சாயத்தார் சங்கத்தின் உதவி காரியதரிசி அவர்களுக்குக்கொடுப்பது,"

அச்சுபாரம் கைசேர்ந்திருந்தால் அடியில்கண்டபடி விவரங்களை யெழுதியநுப்ப வேண்டுமென்று கோறுகிறோம். நம்முடைய இயக்கத்தைச்சரியான நிலையில் அமைப்பதற்கு இதுவேதகுதியான சமயம் ஆகையால் தாமதமின்றி அச்சுபாரத்தைப்பூர்த்திசெய்தோ அல்லது அடியில் கண்டபடி விவரங்களை தனிக்கடுதாசியில் எழுதியோ உடனே அநுப்பும்படிக்கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்துசங்கம்

1. பஞ்சாயத்தின் பெயர்
2. கிராமம் ஜில்லா
3. பஞ்சாயத்துக் காட்டின் விஸ்தீரணம்
4. பஞ்சாயத்தால் கொடுக்கப்பட்டகிஸ்து
5. சென்ற வருஷத்தில் லாபம வந்ததா, நஷ்டம் ஏற்பட்டதா, எவ்வளவு
6. எத்தனைகவ்யூனிட்கள்
7. சென்றவருஷத்தில் எத்தனை பெர்மிட்டிகள் கொடுக்கப்பட்டன. 1 மாடுகளுக்கு
   2 எருமைகளுக்கு
   3 ஆடுகளுக்கு
   4 தழைகளுக்கு
   5 சுள்ளிகளுக்கு

அறிக்கை: வருடச் சந்தாப்பணமாகிய 2 ரூபாயை உடனே அனுப்பவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறோம்.

சங்கசம்பந்தமான கடிதங்கள் உதவிகாரியதரிசியின் மேற்கூறிய விலாஸத்திற்கே அநுப்பவேண்டுமென்றுகோறுகிறோம், உங்களுடைய கஷ்டங்களையும் குறைகளையும் அடிக்கடி தெரிவிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

## எம்மிடம் வாங்கிப் பாருங்கள்

நாணயம், சொல்தவறுமல் செய்து கொடுத்தல், சரியான
நகைகள், கெம்புகள், வைரங்கள் இவைகளை நீர்
நாடு விரானல் எம்மிடம் ஒரு தடவை
வாங்கிப்பார்த்தால், நாம் செய்கிற
ஸகாயத்தைப்பற்றிநீர் வெகு
திருப்தியை யடைவீர்
என் பதில் சந்
தேகமே
இல்லை.

## எங்களுடைய கருர் விலை

உங்களுக்கு திருப்தியையே கொடுக்கும். வீடுகளில்
உபயோகிக்கக் கூடியவையும், விசேஷகாலங்
களில் வெகுமதியாக கொடுக்க யோக்ய
தையான வெள்ளிப்பாத்திரங்களையும்
நாங்கள் நல்ல வேலைக்காரர்களை
வைத்துக்கொண்டு செய்
கிறோம் ஒரே தடவை
எம்மை பரீக்ஷை
பாருங்கள்.

**ஸுராஜ் மல் லல்லுபாய் அண்டு கோ.,**
**கீர்த்திபெற்ற வைர வியாபாரிகள்.**

313 எஸ்பிளனேட்: : : : மதராஸ்.




# மித்ரி.

## தேவாலயத்தில் ஏற்பட்ட ஆனுச்சாரங்களினுல் அழிந்து போன ஓர் நகரத்தைப்பற்றிய கதை.

[ம-ா-ா-ஸ்ரீ டி. வி. சுவாமிநாத ஐய்யர் அவர்கள் எழுதியது.]

பாஞ்சாலத்தில் மூலஸ்தான் அல்லது முல்தானென்கிற ஓர் நகரமிருப்பதை யாவரும் அறிவார்கள் அந்நகரமானது 2000 வருஷங்களுக்குமுன் மஹா அலேக்ஜாண்டர் நம்முடையதேசத்தில் படையெடுத்து வந்த காலத்திலேயே ஓர் பெரிய ஸமஸ்தானத்தின் முக்கிய பட்டணமாயும், செல்வத்திலும் நாகரிகத்திலும் உயர்ந்ததாயுமிருந்தது. அது காரணம் பற்றியே அலெக்ஜாண்டர் முல்தானையும் தாக்கினுன்.

பாஞ்சாலத்தில் கிரேக்கர்கள் வெகு காலம் வாஸமாயிருந்து கொண்டு இந்துக்களுடன் கல்யாண ஸம்மந்தங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். அநேக கிரேக்க ஸேனுபதிகள் இந்து ராஜாக்களின் பெண்களை விவாஹம் செய்து கொண்டனர்.

கிரேக்கர்கள் நம்முடைய தேசத்தில் படையெடுத்து வந்த காலத்தில் முல்தானை சூரியவம்ச அரசர்கள் அரசாண்டு வந்தார்கள். ஆகையால் அந்நகரில் அவர்கள் மார்த்தாண்டருக்காக ஓர் சிறந்த ஆலயத்தை அமைத்திருந்தார்கள். மார்த்தாண்டரின் ஆலயமானது ஸலவைக்கற்கள் முதலிய உயர்ந்த கற்களால் கட்டப்பட்ட விசாலமான மண்டபங்களுடனும், கனக சிகரங்களையுடைய உயர்ந்த கோபுரங்களுடனும் ஸ்ரீமார்த்தாண்டபகவானுக்கேற்ற ஆலயமாயிருந்தது. அதில் ஸ்ரீமார்த்தாண்டரின் சன்னிதியானது பொன் தகடுகளில் நாநாவித ரத்தினங்களிழைக்கப்பட்ட சுவர்களையுடைய நேர்த்தியான மண்டபத்தில் அமைந்திருந்தது. மார்த்தாண்டபகவானின் மூர்த்தியோ ரத்னமாலைகளுடனும் வைரமுடியுடனும் தேஜோமயமாய் விளங்கிற்று.

இந்த தேவாலயத்தை முல்தான் அரசர்கள் வெகு விமரிசையாய் நடத்திவந்தார்கள். மார்தாண்ட மூர்த்திக்குப் பூஜைகள் வேதோக்தமாய் நடக்க வேண்டுமென்று அவ்வரசர்கள் வைதிக சிரத்தையுள்ள உயர் ஜாதிப் பிராமணர்களை ஆலய பூஜைக்கு நியமித்து அவர்களுக்கு நிலங்களையும், குடியிருக்க வீடுகளையும் கொடுத்தார்கள். இவைகளைத்தவிர பிராமணர்களுக்கு சுவாமிநைவேத்தியரூபமான இனிய உணவுகளும், தரித்துக்கொள்வதற்குப் பட்டுப் பீதாம்பரங்களும், அணிந்து கொள்வதற்கு பொன்கடயங்களும் பொன்கட்டுருத்ராக்ஷ, ஸ்படிகமாலைகளும் அவ்வரசர்களிடமிருந்து கிடைத்தன.

நாளாக நாளாக, பூஜைப்பிராம்மணர்கள் அதிக சுக செல்வங்களால் மதமடைந்து துர் நடத்தை ருசியைக்கொண்டார்கள்

அக்காலத்திலும் ஆலயங்களில் தேவதாஸிகளிருந்தார்கள். தேவதாஸிகள் என்பவர்கள் தேவாலயங்களில் தங்கள் வாழ்நாட்களைக் கழித்து தேவ ஸேவையிலும் தேவகைங்கரியத்திலும் இருந்துகொண்டு தேவனுக்கே தங்களை அர்பணம் செய்து கொண்டிருந்தார்கள். கல்யாணமாகாத பெண்கள் இவ்வித வாழ்வை சுயேச்சையாகவே பின்பற்றிவந்தார்கள். இவ்வழக்கம் காலக்கிரமத்தில் நின்று விட்டது. ஆனல், பல வீடுகளிலிருந்து பெண்கள் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு வரப்பட்டு தேவாலயங்களில் தேவ

தாசிகளாகச் சேர்க்கப்பட்டார்கள். முல்தான் தேவாலயத்திலும் இவ்வித வழக்கமிருந்தது.

அக்காலத்தில் வட இந்தியாவில் சந்திரகுப்த மௌரியனென்கிற கீர்த்திபெற்ற சக்கிரவர்த்தி அரசாண்டு வந்தான். அவனுக்கு மின்னல் கொடிபோன்ற சிறந்த அழகையுடைய மித்ரி என்று பெயரிடப்பட்ட சிறு பெண் ஒருவள் இருந்தாள். அவளும் மேல் கூறியவாறே ஒருவருக்கும் தெரியாதபடியே தூக்கிக்கொண்டு போகப்பட்டு முல்தான் தேவாலயத்தில் சேர்க்கப்பட்டாள்.

மார்த்தாண்டரின் ஆலயத்தில் தங்கமேனியர்களாகவும், பீதாம்பர தாரிகளாகவும், விபூதி ருத்ராக்ஷ ஸ்படிக மாலைகளையும் வைரக்கடுக்கன் தங்க அரைநாண் மோதிரங்கள் கடயங்கள், இவைகளையும் அணிந்து கொண்டும் 20 பொன்னிறமான பிராம்மணர்கள் பூஜை செய்து வந்தார்கள். இவ்விதமாக பூலோக தேவர்களாய்க் காணப்பட்டவர்களுக்குப் பாபருசி மேலிட்டபடியால் அவர்கள் தாங்கட்கத்தைக்காக ஆலயத்திலுள்ள தேவதாஸிகளை பலாத்காரமாய் உபயோகிக்க ஆரம்பித்தார்கள். கொஞ்ச காலத்திற் கெல்லாம் இவ்வழக்கம் சாதாரணமாகிவிட்டது. ஒவ்வொரு பிராமணனுக்கும் கோயில் சிப்பந்திக்கும் ஒவ்வொரு தேவதாசி யென்று ஏற்பட்டுவிட்டது. முல்தான் ஆலயத்தில் ஆகவே 20 ரூபலாவண்யமுள்ள தேவதாஸிகளிருந்தார்கள். 35 வயதான வஸந்தா வென்பவள் இவர்களுள் தலைமை வகித்தாள். அவள் ஜகத்நாராயண னென்கிற பூஜைப் பிராம்மணத் தலைவனுக்குப் பிரியையாகவும் இருந்தாள்.

தேவாலயத்தில் மின்னல் கொடிபோன்ற மித்ரி வந்துசேர்ந்தவுடன் ஜகத்நாராயணனின் புத்திபேதித்தது. அவன் உடனே வஸந்தாவைத் தலைமை ஸ்தானத்திலிருந்து நீக்கி அஸ்தானத்திற்கு மித்ரியை நியமித்து அவளைத் தன்னுடைய பிரியையாக வைத்துக் கொள்ள எண்ணங் கொண்டான்.

தேவாலயத்தில் வீரபாகு வென்கிற ஒரு கண் குருடன் சிப்பந்தித் தலைவனாகவிருந்தான். அவனும் மித்ரியினிடத்தில் இச்சையை வகிக்க ஆரம்பித்தான். அக்காலத்தில் முல்தானில் வீரபாகுவைப் போன்ற பலிஷ்டனே இல்லை. பலத்தை வகித்ததோடு அவன் நல்ல குணங்களையும் வகித்தான். மித்திரியை அவன்பல கஷ்டங்களினின்றும் தப்பவைத்தான். மித்ரியும் அவனிடத்தில் அன்பு பாராட்டினாள். ஆனால் அவள் அவனுடைய வித்தியாஸ நினைவிற்கிடங் கொடுக்கவேயில்லை.

ஸ்ரீ மார்த்தாண்டருக்கு உத்தராயண புண்ய கால தினந்தான் முக்கிய உற்சவதினம். அன்றயதினத்தில் மூர்த்திக்கு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் ஊர்வலங்களும் பிரபலமாக நடத்தப்படுவதுடன், ஆலயத்தில் மார்த்தாண்டன் ஸந்நிதியில் அழகுத்த தேவதாஸிகளால்பாரதநாட்டியங்களும் பின்னல் கோலாட்டங்களும் நடத்தப்படுவதும் வழக்கமாயிருந்தது.

ஜகத்நாராயணன் தன்னுடைய கோரிக்கையை பயிரங்கப் படுத்தி வீரபாகுவைக் கூப்பிட்டு மித்ரியை நன்றாய் அலங்கரித்து அவளை தேவனுடைய சன்னிதிக்கு அழைத்து வரும்படிக் கட்டளையிட்டான். வீரபாகு அரைமனதுடன் இவ்வாக்ஞையை நிறைவேற்றி மித்ரியை தேவனுடைய சன்னிதிக்கு அழைத்து வந்தான். மித்ரி எப்பொழுதையும்விட அதிக அழகாயும் அதிக காந்தியுடனும் காணப்பட்டாள். ஸ்வாமி ஸந்நிதியிலிருந்த அனைவரும் அவளுடைய ரூபத்



தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ஸ்ரீ மார்த்தாண்ட மூர்த்தியோ வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஜகத்நாராயணனும் அவனுடைய பிரியையாகிய வஸந்தாவும் உயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து கொண்டு ஓர் உன்னத ஸ்தானத்தில் உட்கார்ந்திருந்தார்கள். மற்றப் பிராமணர்களும், சிப்பந்திகளும், தேவதாஸிகளும் அவர்களுக்குக் கீழே உட்கார்ந்திருந்தார்கள். பிரமுக ஜனங்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் ஆஜராயிருந்த உடனே ஜகத்நாராயணன் மித்ரியை நாட்டியமாடும்படிக் கட்டளையிட்டான். மித்ரி வெகு சோர்த்தியாக ஆடினாள்; ஸபையிலிருந்தவர்கள் எல்லோரும் அவளுடைய நாட்டியத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். மித்ரி இவ்விதமாகச் சதிராடிக் கொண்டிருக்கையில் முல்தானின் மஹாராஜாவாகிய மல்வி பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தான். அவன் வந்ததும் பிராம்மணர்களும் சிப்பந்திகளும் பயபக்தியுடன் அவனை உபசரித்து ஆஸனத்தில் அமைத்தார்கள்.

மித்ரி ராஜகுமாரி யென்பது ஒருவருக்கும் தெரியாது. அப் பெண்மணி தெய்வபக்தியை வகித்து தேவஸேவையைச் செய்தாள் மாத்திரமே யொழிய அவள் தேவதாஸியாகவிருந்து கொண்டு கல்யாணஞ் செய்து கொள்ளாமலிருக்க உத்தேசித்திருக்கவில்லை. மற்ற தேவதாஸிகளைப் போல் அவள் அசுத்த நடக்கைகளைக் கவுமில்லை. ஜகத்நாராயணனுக்குப் பிரியதாசியாகவிருக்க அவள் ஒப்புக்கொள்ளவில்லை. வீரபாகுவினிடத்தில் அவள் அன்பு பாராட்டின போதிலும் ஸ்திரீ புருஷ இச்சையோடு அவ்வன்பை அவனிடத்தில் அவள் பாராட்டவில்லை. அரசன் மல்வியினிடத்தில் தனக்குள்ள இச்சையை வீரபாகுவினிடத்தில் பலதடவை வெளியிட்டாள்.

மார்த்தாண்டரின் சன்னிதிக்கு அவள் நாட்டியமாட வந்த பிறகு ஜகத்நாராயணனை அவள் வணங்கவில்லை. அவன் அவளிடத்தில் தன்னுடைய [illegible] சொன்னபொழுதும் அவள் அதற்கு காது கொடுக்கவே இல்லை. அரசன் மல்வி வந்ததும் அவனை அவள் மனப்பூர்வமாய் வணங்கிப் பிரியமுடன் பார்த்தாள். ஜகத்நாராயணனுக்கு உடனே பெருங்கோபம் வந்து விட்டது. உடனே அவன் ஸ்வாமி ஸந்நிதியில் அநாச்சாரம் ஏற்பட்டுவிட்டதென்று பெருங் கூச்சலிட்டான். மற்றப்பிராம்மணர்களும் சிப்பந்திகளும் அவனிடத்தில் ஒத்தார்கள். ஜகத்நாராயணன் நடந்த விஷயத்தை எல்லோருக்கும் [illegible], அரசனையும், மித்ரியையும் கூப்பிட்டு, இவ்வ [illegible] ஸ்ரீ மார்த்தாண்டரின் உத்திரவை அடைந்து தெரிவிக்கிறேனென்று சொல்லிவிட்டு ஸ்ரீ மார்த்தாண்ட மூர்த்தியின் [illegible] உத்திரவு வாங்கினது போல் நடித்து உத்திரவை அரசனுக்கும் மித்ரிக்கும் சொன்னான். அரசன் [illegible] மித்ரி ஏழு நாள் [illegible] சுவாமி [illegible] ஸந்நிதியில் [illegible] ஸ்திரீமுக [illegible].

பின்பு ஜகத்நாராயணன் மித்ரியிடம் [illegible] தன்னிடத்தில் [illegible] செய்வதாக [illegible]. வீரபாகு [illegible] இரான் [illegible] ஜகத்நாராயணன் [illegible] தானே [illegible] தான். அதற்கும் அவள் இணங்கவில்லை.

தன்னைத்தள்ளிவிட்டு ஜகந்நாராயணன் மித்திரியைப்பிரியையாக வைத்துக்கொள்ளப்போகிறானென்று திகிலடைந்த வஸந்தாவிற்குப் பல பிராம்மணர்களும் சிப்பந்திகளும் கூட மித்ரி மோஹமாகவே யிருக்கிறார்களென்கிற செய்தி எட்டிற்று; ஜகந்நாராயணனும் மித்ரி அரசனையே விரும்புகிறாள் என்பதை யறிந்து சினங்கொண்டிருக்கையில் வஸந்தா தான் கேள்விப்பட்ட செய்தியை அவனிடத்தில் தெறிவித்தாள்.

இப்படி இருக்கையில் ஜகந்நாராயணன் ஒருநாள் இரவில் சூரிய பகவான் தனக்குத்தோன்றி முல்தான் நகரம் சீக்கிரத்தில் அழிந்து போகும் என்று சொல்வதாகக்கனவுகண்டான். இக்கனவை தன்னுடைய பிரியையாகிய வஸந்தாவிடம் சொல்லிக்கொண்டான். சமயம்பார்த்திருந்த வஸந்தாப் பிராம்மணர்களைக் கூப்பிட்டு கனவின் விவரத்தைச் சொல்லி இவ்வித ஆபத்திற்குக்காரணம் தேவாலயத்தில் மித்ரியிருப்பதால் ஏற்படும் அபச்சாரங்கள் தான் என்றும், ஆகையால் மித்ரியையே தேவனுக்குபலிகொடுத்து வரப்போகிற ஆபத்தைத்தடுக்க வேண்டுமென்றும், வேண்டுமானால் மார்த்தாண்ட மூர்த்தியின் உத்திரவை இவ்விஷயத்தில் அடைந்து கொண்டு நடக்கலாமென்றும் பிராம்மணர்களிடத்தில் சொன்னாள். மார்த்தாண்டமூர்த்தியின் உத்திரவை வாங்கவேண்டுமென்று எல்லோரும் சொன்னபடியால் மித்ரியிடம் கடுஞ்சினங்கொண்ட ஜகந்நாராயணன் மார்த்தாண்ட மூர்த்தியினிடம்போய் நின்றுவிட்டுமித்ரிபலிகொடுக்கபடவேண்டும் மென்று தான் உத்திரவாயிற்று என்று சன்னதியில் கூறினான். அரசன் மல்லிக்கு இச்செய்தியை வீரபாகு தெரிவித்தான். அரசன் கோயிலுக்குள்வந்து பலியை நடத்தக்கூடா தென்று கூறினான். பிராம்மணர்கள் ஒரே கூக்குறலிட்டு பலிநடத்தப்படத்தான் வேண்டுமென்று கூறினார்கள். அரசன் அரண்மனைக்குப் போய் சைன்னியத்துடன் திரும்பிவருவதற்குள் பலிபீடத்திற்கு மித்திரி கொண்டுவரப்பட்டு அவள் கழுத்தின்மேல் கோடாலி வீசப்பட்டது. இந்தசங்கதியையறிந்தவீரபாகு உடனேசன்னிதிக்கு வந்து கோடாலி வீசுவனின் மேல்ப்பாய்ந்து கோடாலியைப் பிடுங்கி இவனைக்கொன்றான். இப்படியிருக்கையில் அரசன் படர்களோடு தேவாலயத்தில்ப்புகுந்து மீதிப்பிராம்மணர்களையும் தாக்கினான். இந்த சமயத்தில் கிரேக்கர்கள் படை யெடுத்து வந்து முல்தான் நகருக்கு தீ வைத்து ஜனங்களை ஹிம்ஸித்தார்கள். முல்தான் வெகு சீக்கிரத்தில் சாம்பலாகி விட்டது. கோயில் பிராமணர்கள் மாண்டார்கள். அரசன் தப்பிப்பிழைத்தான். வீரபாகுவும் மித்ரியைக் காப்பாற்றி அரசன் மல்லியிடம் ஒப்பிவித்து அவளபீஷ்டத்தை நிறைவேற்றினான். மித்ரியும் மல்லியும் விவாஹஞ் செய்து கொண்டு ஒரு புத்திரனை அடைந்தார்கள். பின்பு கிரேக்கர்கள் தோல்வியடைந்து தங்களுடைய தேசத்திற்குத்திரும்பிப் போனார்கள். மல்லியும் மித்ரியும் சந்திரகுப்தனுடைய ஊரைப்போய்ச் சேர்ந்தார்கள். சந்திரகுப்தன் மித்ரியைஆலிங்கனம் செய்து அவளிடமிருந்து நடந்த விருத்தாந்தங்களை அறிந்து கொண்டான். மித்ரி மஹாராஜா மல்லியை விவாஹம் செய்து கொண்டதும் அவர்களுக்கு ஒரு குமாரன் பிறந்ததும் சந்[illegible] அளவில்லாத சந்தோஷத்தைக் கொடுத்தது. [illegible]குப்தன் [illegible]கில் சில பாகத்தைக் கட்[illegible] மல்லிக்கு [illegible]த்தான். வெகு [illegible]காலம் மல்லியும் மித்ரியும் வா[illegible]ர்கள்.